கோகுலம்

GOKULAM

அக்டோபர் 2001

ரூ.6/-



எல்ஐசி.
தொழில்நுட்பம் மூலம் உங்கள் எதிர்பார்ப்புகளை விட அதிகமாக சாதித்துள்ளது.

எல்ஐசியில், உங்களுக்கு மிகச்சிறந்ததை அளிப்பதே எங்கள் விடா முயற்சியாக இருந்து வந்துள்ளது. எங்கள் திட்டங்களையும் சேவைகளையும் அதிகமாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் அமைக்க நாங்கள் தொடர்ந்து தொழில்நுட்பத்தின் மூலம் நவீனப்படுத்தி வருகின்றோம்.

கணினிமயமாக்கப்பட்ட கிளைகள்
எல்ஐசியின் அனைத்து 2048 கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இவை உடனுக்குடன் ரசீதுகள், பாலிசிக்கடன் பற்றிய தகவல் மற்றும் ஏனைய பாலிசி தகவல்கள் ஆகியவற்றை மிகவும் விரைவாக வழங்குகின்றன.



ஐவிஆர்எஸ்*
(தானியங்கி தொலைபேசி தகவல் மையம்) இப்பொழுது உங்கள் பாலிசி பற்றிய விவரங்கள் விரைவாகக் கிடைப்பது உங்கள் விரல் நுனியில். எங்கள் தானியங்கி தொலைபேசி தகவல் மையத்துடன் தொடர்பு கொண்டால் போதும், உங்கள் பாலிசி, கடன் கிடைக்கும் வாய்ப்பு மற்றும் கடன் தொகை, முதிர்வு தேதி, குறித்தகால பயன் விவரங்கள், பாலிசி போனஸ் மற்றும் மேலும் பல விவரங்கள் உங்களுக்கு உடனடியாகக் கிடைக்கும்.

இணையம் மூலம் பிரிமியம்
மும்பையில் இணையம் மூலம் பிரிமியம் செலுத்த முடியும். [illegible] வங்கி, ஹெச்டிஎஃப்சி வங்கி, Billjunction.com அல்லது Timesofmoney.com ஆகிய நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றில் உங்களை பதிவு செய்து கொண்டு, எளிய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

தொடு திரை தகவல் மையம்
13 நகரங்களில் 15 நேரடி தகவல் மையங்கள் மற்றும் 14 நகரங்களில் 15 இணையம்பெற்ற தகவல் மையங்கள் உங்களுக்கு எல்ஐசி மற்றும் அதன் திட்டங்களைப் பற்றின தகவலை வழங்குகின்றன.

மாநகர கணிப்பொறி இணைப்பு மற்றும் விரிவான கணிப்பொறி இணைப்பு
எங்கள் கணிப்பொறி இணைப்புகள் மூலம் 41 நகரங்களில் எந்தக் கிளையிலும் உங்கள் பிரிமியம் தொகையை செலுத்த முடியும் மற்றும் உங்கள் பாலிசியைப் பற்றிய தகவலை சுலபமாகப் பெறமுடியும்.

அனைத்து வசதிகளும் கூடுதல் செலவில்லாமல் கிடைக்கின்றன. மறவாதீர்! நாங்கள் இப்போது உங்களுக்கு மிக அருகில் இருக்கிறோம்.

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா
நாங்கள் இந்தியாவை நன்றாக அறிவோம்

*ஐ வி ஆர் எஸ் தொலைபேசி எண்கள்:
Chennai (044)-8584141 • Coimbatore (0422)-302888 • Ernakulam (0484)-374242 • Khozikode (0495)-724455
Madurai (0452)-525000 • Pondicherry (0413)-240005 • Salem (0427)-411481
Tanjavur (04362)-74777 • Trivandrum (0471)-543011.

Insurance is the subject matter of solicitation.

Log on to www.licindia.com for more details.

LIC-21\TAM\2001-02

கோகுலம்


மலர் : 19


இதழ் : 9

அக்டோபர் 2001












உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.



கோண்டு

கோதண்டம் அரைச் சமர்த்து. அம்மா 'கோண்டு' என்று செல்லமாக அழைப்பாள். ஏட்டிக்குப் போட்டி செய்வான்.

ஒருமுறை சில போக்கிரிகள், "கோண்டு! உங்க வீட்டிலே உனக்கு மரியாதையே கிடையாதாமே! திடீரென்று யாரையாவது கூட்டிக் கொண்டு போய், 'சாப்பாடு போடு' என்று சொன்னால், 'போடா' என்று உன்னை அடித்து விரட்டி அவமானப்பட வைப்பார்களாமே!" என்றனர்.

கோண்டுவுக்கு ரோஷம் பொங்கியது.

"சரி! நீங்க இப்போ என்னோட வாங்க. உங்களுக்குச் சாப்பாடு போட்டு அப்படியில்லை என்று நிருபிக்கிறேன்" என்றான்.

போக்கிரிகள் ஆறு பேரும் அவனோடு சென்றனர். அவர்களை வாசல் திண்ணையில் அமர்த்தி விட்டு உள்ளே சென்றான் கோண்டு.

"என்னடா, எங்கே சுத்திட்டு வர்றே? வந்து கொட்டிக்கோ" என்றாள் அம்மா.

"உஸ். சத்தம் போடாதே. என் சினேகிதர்கள் ஆறு பேர் வாசல் திண்ணையிலே இருக்கிறார்கள். அவங்களுக்குச் சாப்பாடு போடறதா அழைச்சிட்டு வந்திருக்கேன்" அம்மா அருகில் சென்று மெதுவாகத் தயங்கியபடி விண்ணப்பித்தான் கோண்டு.

"அடி செருப்பாலே! உனக்குப் போடறதே தண்டச்சோறு! இதிலே விருந்து வேறா? இங்கே உன் முப்பாட்டன் சேர்த்து வைத்த சொத்து கொட்டியா கிடக்கு?" என்று கோபமாக இரைந்தாள் அவன் அம்மா.

கோண்டு பரிதாபமாக விழித்தான்.

தாய் மனதாயிற்றே! இரக்கம் வந்தது. "சரி, சரி... நீ போய் மாடியிலே இரு. நான் கூப்பிடுகிறவரை கீழே இறங்காதே! அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள். கோதண்டம் மகிழ்ச்சி

மாலதி

யோடு மாடிக்குச் சென்றான்.

வெகு நேரமாயிற்று. போக்கிரிகள் பொறுமை இழந்து கதவை மெதுவாகத் திறந்து எட்டிப் பார்த்தனர்.

"யாரு?" என்றபடி வெளியே வந்தாள் கோதண்டத்தின் அன்னை.

"நாங்களெல்லாம் கோண்டுவுடைய சிநேகிதர்கள். விருந்து தர்றதா சொல்லிக் கூட்டிட்டு வந்தான். எங்களைத் திண்ணையிலே உட்கார்த்திட்டு உள்ளே போனவன் வெளியே வரவேயில்லை. உள்ளே என்ன செய்கிறான்?" என்றான் ஒருவன்.

"அவன் அப்பவே வெளியே போயிட்டானே! நீங்க பார்க்கலையா?" என்று அப்பாவி போல் கேட்டாள் அவள்.

கோண்டுவை உள்ளே வைத்துக் கொண்டு ஏமாற்றுகிறாள் என்று எரிச்சல்பட்ட ஒருவன், "இந்த வீட்டுக்கு ஒரு வாசல்தானே!

வழி தனி வழி!



நாங்கள் வாசலைப் பார்த்துத்தானே உட்கார்ந்திருந்தோம். கோண்டு போகவில்லையே!" என்று மடக்கினான்.

"வாசல் ஒன்றுதான்! எங்க வீட்டு மொட்டை மாடியை ஒட்டிப் பெரிய வேப்பமரம் இருக்கு. அதைப் பிடிச்சுட்டு தெருவுக்கு ஓடறது சுலபம், பார்க்கிறியா?" என்று மொட்டை மாடியிலிருந்து குரல் கொடுத்த கோண்டு, வேப்பமரக் கிளையைப் பற்றி சரசரவென்று ஏறி தெருவில் குதித்து ஓடினான்.

தாயும், போக்கிரிகளும் பிரமித்து நின்றிருந்தனர்.

கோண்டுவுக்கு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்வித்தாள் அவன் அன்னை. அவனது மாமியார் ஒரு விதண்டாவாதி. எவர் சொல்வதையும் மறுத்துப் பேசுவது அவள் வழக்கம்.

"கோதண்டம்! ஆற்றில் குளிக்கப் போன உன் மாமியாரை வெள்ளம் அடித்துக் கொண்டு போகிறதப்பா" என்று ஒருவர் பதறியவாறு வந்து சொன்னார்.

கோண்டு உடனே ஓடி வந்து ஆற்றில் குதித்தான். ஆனால் வெள்ளத்துக்கு எதிராக நீந்தினான். கூடி இருந்



''எங்க அப்பா எல்லார்கிட்டேயும் 'சோஷியலா' பழகுவாரு!''

''எங்க அப்பா யாராயிருந்தாலும் 'கணக்கா'தான் பழகுவாரு!''


– தஞ்சை தாமு



"தபால்ல ஸ்டாம்ப் ஒட்டலைன்னா என்ன ஆகும்?"

"ஸ்டாம்ப் கீழே விழுந்துடும்."

– தாரமங்கலம் மகேஷ்



''தூக்கக் கலக்கத்துல கட்டிலிலிருந்து கீழே விழுந்ததுக்குப் போய் ஏன் இந்த அலறு அலறுறான் அவன்?''

"இமயமலையில ஏறி எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டுக்கிட்டு இருக்கிற மாதிரி கனவு கண்டுக்கிட்டு இருந்தானாம்... அதான்!''

– காயக்காடு ராமகிருஷ்ணன்

தவர்கள் திகைத்தனர்.

"கோதண்டம்! இப்படி போனால் உன் மாமியாரைக் காப்பாற்ற முடியாது'' என்றார் ஒருவர்.

"அட, சும்மா இருங்க! உங்களுக்குத் தெரியாது. உலகமெல்லாம் ஒரு பக்கம் போனால் என் மாமியார் எதிர் பக்கம் தான் போவார்" என்று தொடர்ந்து எதிர் பக்கமே நீந்த, வேறு சிலர் குதித்து வெள்ளத்தோடு நீந்தி மாமியாரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

அது முதல் மாமியார் எதிர்வாதம் செய்வதை விட்டு விட்டார்.

ஒரு தடவை கோண்டுவின் மனைவியுடைய சித்தப்பா வீட்டுக்கு வந்திருந்தார். அவர் வருவதாகச் சொல்லி இருந்தும் கோண்டு மனைவியோடு பக்கத்து ஊருக்குத் திருவிழா பார்க்கச் சென்று விட்டான்.

''சித்தப்பா அடிக்கடி வருவார். திருவிழா வருஷத்துக்கொரு தடவைதான் வரும்" என்றான் மனைவியிடம்.


சித்தப்பா உயர்ந்த பதவியில் இருந்தார். செல்வந்தரும் கூட. நம்மைக் காண பலர் காத்துக் கிடக்க, கோதண்டம் இப்படி பண்ணி விட்டானே என்று ஆத்திரம் கொண்டார்.

சுண்ணாம்புக் கட்டியால் கதவில், 'முட்டாள், மட்டி, மடையன்' என்று எழுதி விட்டுப் போனார்.

திரும்பி வந்து அதைப் படித்த கோண்டு, "இதை எழுதினது யார்?" என்று அம்மாவிடம் கேட்டான்.

"உன் மனைவியின் சித்தப்பா" என்றாள் அம்மா.

"அட, உங்க சித்தப்பாவுக்கு இப்படியெல்லாம் கூட பெயர் இருக்கிறது என்று எனக்குத் தெரியாதே! முட்டாள் சித்தப்பா, மட்டிச் சித்தப்பா, மடையச் சித்தப்பான்னு இனிமேல் கூப்பிடலாம்! ரொம்ப ஜோராயிருக்கே! நீ என்கிட்டே சித்தப்பா இப்படியெல்லாம் பட்டம் வாங்கி இருக்கிறதைச் சொல்லவே இல்லையே! யார் வந்தாலும் பேரை எழுதி வைச்சுட்டுப் போகிறது நல்ல பழக்கம்தானே!" என்று கோதண்டம் பேசப் பேச அவன் மனைவி தலையில் கைவைத்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டாள்!


விஷம விச்சு
நவராத்திரிக்காக கொலு பொம்மைகளைப் பரணிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தார் விச்சுவின் அப்பா!
அம்மா சமையலறையில் வேலையாக இருந்தார். விச்சுவும் தங்கையும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்!
ஏய் விச்சு, அப்பா பொம்மையெல்லாம் எடுக்கற இடத்தில் ஓடாதீங்க. பொம்மை உடைஞ்சிடும்.
டேய்! கீழே பொம்மையெல்லாம் இருக்கு. இங்கே ஓடி விளையாடினால் தோலை உரிச்சிடுவேன். ஜாக்கிரதை!
பழங்காலத்து கிருஷ்ணர் பொம்மையைச் சிரமப்பட்டு எடுத்தார் அப்பா.
திடீரென நிலை தடுமாறினார். பொம்மை கை நழுவியது. ஏதேச்சையாக விச்சுவும் தங்கையும் அங்கே ஓடி வந்தார்கள்.
கைகளை நீட்டிக் கொண்டே ஓடி வந்த விச்சுவின் கைகளில் பொம்மை விழுந்தது. விச்சுவும் லபக்கென்று பிடித்துக்கொண்டான்.
விச்சு சமயத்தில ஓடி வந்து நீ பிடிக்கலேன்னா தாத்தா காலத்து பொம்மை உடைஞ்சிருக்கும். வெரிகுட் விச்சு!

பின்வாங்க மாட்டேன்!

கற்றுக் கொடுத்தது யார்?

இராமானுஜம் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது இரண்டு கல்லூரி மாணவர்கள் ஒரு கணக்கைச் செய்ய முடியாமல் தவிப்பதைப் பார்த்தார். அந்தக் கணக்கை மிக எளிதாகத் தெளிவான படிகளுடன் செய்து காண்பித்தார். மறுநாள் கல்லூரியில் அந்த இரு மாணவர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் அந்தக் கணக்கைச் செய்து வரவில்லை. இவர்கள் செய்த 'படி' களைப் பார்த்த பேராசிரியர், "உங்களுக்கு இந்தக் கணக்கை எந்தக் கல்லூரி பேராசிரியர் சொல்லிக் கொடுத்தார்?" என்று கேட்க, மாணவர்கள் சொன்ன உண்மையைக் கேட்டு அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். கணிதத்தில் சாதனை பல புரிந்த ராமானுஜம் தனது 28ம் வயதிலேயே காசநோய்க்குப் பலியானார்.

— நா. பாண்டியம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை,
இராமநாதபுரம்.

முன்னேற...

காந்திஜியும் நேருவும் ஒருமுறை பாதயாத்திரை சென்றனர். வழியில் ஒரு பள்ளம். நேரு அதைத் தாண்டி கடந்து விட்டார். காந்திஜி நீளமான மரப்பலகை ஒன்றைப் போட்டு நடந்தார். அப்பொழுது நேரு, "தாங்கள் இப்பள்ளத்தை என்னைப் போல் தாவி நடந்திருக்கலாமே" எனக் கேட்டார். "பள்ளத்தைத் தாண்ட நீங்கள் எவ்வளவு தூரம் பின்னால் சென்று ஓடி வந்தீர்கள் தெரியுமா? நான் பின்வாங்க விரும்பவில்லை. இருந்த இடத்திலிருந்தே முன்னேற விரும்புகிறேன்" என்றார் காந்திஜி சிரித்தவாறு.

— ஆறுபாதி புகழேந்தி.


தேடல்...

"உலகிற்கு நான் எப்படிப்பட்டவனாகத் தெரிகிறேன் என்பதை அறியேன். என்னைப் பொறுத்தவரை ஒரு கடற்கரையில் கையில் கிடைக்கும் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் சாதாரண சிறுவன் நான். மேலும் மேலும் தேடல். இதைவிட அதை விடச் சிறந்ததை நோக்கிய தேடல். தனது எண்ணிலடங்காப் புதிர்களுடன் உண்மை எனும் பெருங்கடல் கண்டறியப் படாத நிலையில் என் முன் விரிந்து கிடக்கிறது" என்றார் ஐசக் நியூட்டன்.

— ஆ. கதிரேஷ், ஈரோடு.



* லிங்கன்




* ஜி.டி. நாயுடு

அழகில்லாதவன்...

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் ஆபிரகாம் லிங்கன். அவர் ஒருநாள் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஒரு குதிரை வண்டிக்காரன் அவரிடம் வந்து வணங்கினான். "அய்யா... உங்களுக்குச் சேர வேண்டிய பொருள் ஒன்று நீண்ட நாட்களாக என்னிடம் இருக்கிறது. பல நாட்கள் தேடி இன்றுதான் உங்களைக் கண்டுபிடித்

தேன்'' என்றான். ''அப்படி என்னப்பா எனக்குச் சேர வேண்டிய பொருள் உன்னிடம் இருக்கிறது?'' என்று



• காந்தி



• நேரு

புரியாமல் கேட்டார் லிங்கன். அவன் ஒரு பழைய மழுங்கிப் போன கத்தியை எடுத்துக்காட்டி, ''இதுதான் உங்களுக்குச் சேர வேண்டியது'' என்றான்.

''இது எனக்குச் சேர வேண்டியதா?'' என்று வியப்புடன் கேட்டார் லிங்கன்.

''ஆமாம். ஒரு பெரியவர் என்னிடம் இந்தக் கத்தியைக் கொடுத்து, நீ காணும் மனிதர்களில் அழகில்லாதவன் எவனோ அவனிடம் இதைக் கொடு என்றார். நான் ஒவ்வொரு நாளும் அழகில்லாதவர் யார் என்று தேடிக் கொண்டிருந்தேன். இன்றுதான் உங்களைக் கண்டுபிடித்தேன்'' என்றான் அந்தக் குறும்புக்காரன். லிங்கன் சற்றும் கோபப்படாமல், பொறுமையாக அவனிடம், ''சரி, உன் விருப்பத்தை நான் கெடுக்க விரும்பவில்லை. அந்தக் கத்தியை என்னிடமே கொடு. நீ அதை இவ்வளவு நாட்கள் பத்திரமாக வைத்திருந்ததற்கு உனக்கு நன்றி'' என்றார்.

லிங்கன் கோபமடைவார் என்று எதிர்பார்த்த அவன் அவருடைய பொறுமையையும் பெருந்தன்மையையும் கண்டு வெட்கி, தலைகுனிந்தான். தன்னை மன்னிக்கும்படி அவரிடம் வேண்டினான்.

— மு. பெரியசாமி,
விட்டுக்கட்டி.

• பாரதியார்



சொந்த முயற்சி...


பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதில் படிப்பில் நாட்டம் இல்லாது தலைவலி மருந்துகளைத் தெருவில் விற்றுத் திரிந்த ஜி.டி. நாயுடு தம்முடைய சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர். ஒரு தோட்ட முதலாளியிடம் மெக்கானிக்காக வேலைக்குச் சேர்ந்தார். பின்பு சிறந்த மோட்டார் ஓட்டுநராக உயர்ந்து விரைவிலேயே பெரும் மோட்டார் நிறுவன உரிமையாளர் ஆனார். தொழில்துறையில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தார். இவர் தன் வாழ்நாளில் 5 முறை அமெரிக்காவிற்கும், 10 முறை பிரிட்டனுக்கும், 25 முறை ஜெர்மனிக்கும் சென்று வந்தார். ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரைப் பேட்டி கண்டு வந்த முதல் தமிழர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

— பெ. நடராசன், ஒன்பதாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை.

இளமையில் கல்

சென்னை திருவல்லிக்கேணியில் பாரதியார் ஒரு ராயர் வீட்டில் வசித்து வந்தார். அந்த வீடு தற்போது நினைவிடமாக உள்ளது. பல குடித்தனங்கள் வசித்து வந்த அந்த வீட்டின் முன்பகுதியில் சிறுவன் ஒருநாள் உரக்கப் படித்துக் கொண்டிருந்தபோது, ''இளமையில் கல்'' என்று வாய் விட்டுக் கூறினான். இதைக் கேட்டபடி வீட்டினுள்ளே நுழைந்து கொண்டிருந்த பாரதியார், ''இல்லையேல் முதுமையில் மண்'' என்று கூறியபடியே அவனைத் தாண்டிச் சென்றார்.

— நெ. இராமன், சென்னை.


மரியாதை
கதை : சரஸ்வதி
படம் : மகேஸ்
ரங்கன் மண்பாண்டம் செய்து பிழைப்பு நடத்தி வந்தான். ஒரு நாள் -
ஐயா, வணக்கம்.
என்னது! வணக்கம் சொன்னால் கூட முகத்தைத் திருப்பிக்கிறாரே?
ரங்கா, இந்தக் காலத்துல பணம் இருந்தால்தான் மதிப்பு.
நாட்கள் சென்றன. ஒரு நாள் ரங்கன் பரணில் கிடந்த பழைய ஜாடியை எடுக்கப் போனான்.
ஏங்க அந்தப் பழைய ஜாடியை எடுக்கறீங்க?
கையில் பணம் இல்லை. மழை பெய்யறதாலே தொழிலும் செய்ய முடியலை.
அதனால?
இந்த ஜாடியை மெருகேற்றி வித்துட்டு வரலாம்னு நினைக்கிறேன்.
ரங்கன் ஜாடியின் மூடியைக் கழற்றினான்.
உள்ளே ஒரு பை இருக்கு.
என்னன்னு சீக்கிரம் பாருங்க.



பழைய தங்க நகைகள்.
நம்ம கஷ்டம் தீர்ந்தது.
ரங்கன் நகைகளை விற்றுப் பெரிய அளவில் தொழில் செய்தான். பணம் பெருகியது. ஊரார் அவனை மதித்தனர். ஒரு நாள்-
ரங்கா வணக்கம்.
நான் அவற்றிடம் உங்கள் வணக்கத்தைச் சொல்லிடறேன்.
என்னாச்சு இவனுக்கு? இப்படி பேசறானே!
யார் வணக்கம் சொன்னாலும் இப்படியே சொல்றான். எல்லாம் பணத் திமிர்.
ஒரு நாள் அந்த ஊர் செல்வந்தர் ரங்கனை வழியில் பார்த்து வணக்கம் சொன்னார்.
உங்கள் வணக்கத்தை அவற்றிடம் சொல்லிடறேன் ஐயா.
என்ன திமிர் உனக்கு? மரியாதையே தெரியாதா உனக்கு?
கோவிச்சுக்காதீங்க ஐயா. நான் ஏழையா இருந்தப்ப யாரும் எனக்கு வணக்கம் சொன்னதில்லை. என் வணக்கத்தையும்கூட ஏத்துக்கிட்டதில்லை. இப்ப பணம் வந்ததும் மரியாதை தர்றீங்க. அது எனக்கு இல்லை...
...அதான் பணத்திடம் உங்கள் வணக்கத்தைத் தெரிவித்து விடறதாகச் சொன்னேன். மன்னித்து விடுங்கள்.
நீதான் ரங்கா எங்களை மன்னிக்கணும்.

சார் தபால்



பாம்பு ஸ்பெஷல்!

'மனதில் ஊனம் வேண்டாம்' என்ற தலைப்பில் ஆறு தலைவர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களைத் தந்திருந்தீர்கள். எல்லா செய்திகளும் சுவையாகவும் அவர்கள் புகழ் மேலும் ஓங்கும் விதமாகவும் அமைந்திருந்தது.

- சித்திரவேலு, நெய்விளக்கு.

'ராஜ நாகம்' பற்றி ஆழி அவர்கள் எழுதிய படக்கட்டுரையைப் படித்தபோது உடல் சிலிர்த்தது. 'தியானம்' படக்கதையை எங்கள் வகுப்பில் நீதி போதனை வேளையில் கூறியபோது அனைவரும் கைதட்டிச் சிரித்துவிட்டனர்.

- வே. சுபஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர்.

நரி அண்ணன் கடைக்கு வந்த எருமை அண்ணா பாடல் படிக்கும்போதே ராகத்துடன் பாடத் தூண்டியது.

- கே. மாலதி, ஆடுதுறை.

எங்கள் ஊரில் நடந்தது தலைப்பில் இறந்த பாம்பு ஊர்ந்தது, எங்கள் பள்ளியில் நடந்தது பகுதியில் பாம்பு பற்றிய பாடம், ஆழியின் ராஜநாகம், உங்களுடன் ஒரு நிமிடம் பகுதியில் காளிங்க நர்த்தனம் என கோகுலம் 'பாம்பு' ஸ்பெஷலாக அமைந்து விட்டது.

- எம். செல்லையா, சாத்தூர்.

தந்தை தன்னைத் திட்டி விட்டாரே எனக் கோபமுற்று வீட்டை விட்டுக் கிளம்பிய வரதன் சந்தித்தவர்களெல்லாம் தனக்குக் கற்பித்த படிப்பினைகளை எண்ணிப் பார்த்து, வீடு திரும்பி, முயற்சி செய்து தண்ணீர் பெற்ற கதை வெறும் நகைச்சுவை மட்டுமல்ல. தத்துவமாகவே இருந்தது.

- பஞ்சவண்ண மகன், கருப்பம்புலம்

சில வருடங்களுக்குப் பிறகு இலங்கை அணி மறுபடியும் வலுவான அணியாக உருவாகி வருகிறது. இந்த அணிக்கு கேப்டனான ஜெயசூர்யா மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறார். அவர் கால் பந்துடன் காட்சி தந்த வித்தியாசமான போஸ்டர் அசத்தல்.

- ஆர். நம்புராஜ், கே. தனபால், ஆத்தூர்.

கோகுலம் சுழல் கோப்பை

ஒவ்வொரு ஆண்டும் கோகுலத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. மேலச்சீத்தை, ஆண்டிப்பட்டி, தூத்துக்குடி ஆகிய பள்ளிகளில் கோப்பையைக் கைப்பற்றப் போகும் பள்ளி எது? இன்னும் இரண்டு மாதத்தில் தெரிந்து விடும். உங்கள் பள்ளியும் கோப்பை வாங்க விருப்பமா? அப்படியென்றால் நீங்களும் உங்கள் நண்பர்களும் படைப்புகளை எழுதி அனுப்புங்கள்.

மாணவ, மாணவியர்க்கு உதவும் வகையில் மாதந் தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இந்தப் போட்டி உங்களிடம் எவ்வளவு ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இங்கு குவியும் கூப்பன்களிலிருந்தே அறிய முடிகிறது.

இப்போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள இயலும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி 20.10.2001

இந்த மாதப் போட்டி :

இங்கு தென்னை, வாழை, மா, வேப்ப, அரச, புளிய மரங்களின் இலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இலைகளுக்குச் சொந்தமான சரியான மரங்களைக் கண்டுபிடித்து வரிசைப்படி எழுதி அனுப்புங்கள்.

1. ______________________

2. ______________________


3. ______________________

4. ______________________


5. ______________________

6. ______________________

ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!







ஆசிரியர்
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

உங்கள் அனைவருக்குள்ளும் ஒரு கவிஞன் உண்டு. ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும் ஒரு குழந்தை உண்டு. கவிஞன் மட்டுமல்ல; உங்களுக்குள் ஓவியன் இருக்கலாம்; பாடகன் இருக்கலாம்; இசைக் கலைஞன் இருக்கலாம்; பேச்சாளன் இருக்கலாம். யார் வேண்டுமானாலும் இருக்கலாம். அதைக் கண்டு பிடித்து வளர்ப்பது ஒரு கலை.

இதைப் பற்றி உங்களுக்கு ஒரு சுவையான சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். ரஷ்யாவில் வசீலி சுகம்லீன்ஸ்கி என்ற பள்ளி ஆசிரியர் ஒருவர் இருந்தார். குழந்தைகளை எப்படி ஆளாக்குவது என்பதற்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் அவர். இரண்டாம் உலகப் போரிலும் பங்கு கொண்டவர். குழந்தைகளை அதிகாலை நேரத்தில் இயற்கை சூழ்ந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வார். குழந்தைகளின் மனதில் தோன்றியதையெல்லாம் செய்யச் சொல்லுவார். ஒரு குழந்தை உதய சூரியனை வரைந்து கொண்டிருக்கும். ஒரு குழந்தை கொத்தாக கனிகள் தொங்கும் திராட்சைத் தோட்டத்தைப்பற்றி கவிதை எழுதி கொண்டிருக்கும். ஒரு குழந்தை உற்சாகமாகப் புலரும் பொழுதைப் பற்றி பாடிக் கொண்டிருக்கும். அந்தக் குழந்தைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு விட்டு அவர்களுக்



நல்ல

குள் இருக்கிற கலைஞர்களைக் கண்டு பிடிப்பார். பிறகு அந்தந்த குழந்தைகளுக்கு அதற்கேற்ப சிறப்புப் பயிற்சிக் கொடுப்பார். எந்தெந்த துறைகளில் ஆர்வம் இருக்கிறதோ அந்தந்த துறைகளில் குழந்தைகள் பயிற்சி பெற்று நிலைத்து நிற்பார்கள். அந்த உன்னதமான ஆசிரியர் இறுதி ஊர் வலத்தில் ஆயிரக்கணக்கில் குழந்தைகள் கண்ணீருடன் பங்கு கொண்டார்கள்.

பழநிபாரதி



இப்படித்தான் ஒரு நாள் என் நான்கு வயது மகள் லாவண்யா ஒரு முழு வெள்ளைப் பூண்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு ''ஹை பம்பரம்'' என்று சொன்னாள். மற்றொரு முறை பல்லாங் குழிகளில் சோழிகளைப் போட்டு மூடி வைத்து '''கொழுக்கட்டை' சமைக்கிறேன்'' என்று சொன்னாள். அவளுக்குள் இருந்த கவிஞனை அப்போதுதான் நான் கண்டு பிடித்தேன்.

அது சரி, உங்களுக்குள் ஒரு கவிஞனைக் கண்டு பிடித்துவிட்டால் அவனை

கவிஞராவது எப்படி?

எப்படி வளர்ப்பது? வானம், சூரியன், நிலா, நட்சத்திரங்கள், நதிகள், அருவிகள், பூக்கள், பறவைகள், இவையெல்லாம் வற்றாத கற்பனையையும் உற்சாகத்தையும் உங்களுக்கு ஊட்டும். நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது குற்றால அருவி பற்றிய பாடம் எங்களுக்கு இருந்தது. அதைப் படித்த பாதிப்பில் குற்றால அருவி பற்றிய கவிதையை என்னால் எழுத முடிந்தது. இயற்கை அழகை - அது நமக்குச் சொல்லும் பாடங்களை உற்றுக் கவனியுங்கள். அப்போது உங்கள் மனதில் பீறிட்டுப் பொங்குகிற உற்சாகம் தான் உங்கள் கவிதைக்கு உரம். உதாரணமாக, பாரதியின் இந்த வரிகளைப் பாருங்கள்.

'காக்கை குருவி எங்கள் ஜாதி - நீர் கடலும் மலையும் எங்கள் கூட்டம்'



கவிதை எழுதுவதற்குத் தேவையான வெள்ளைக் காகிதத்தைப் போலவே அழுக்குப்படாமல் - தூய்மையாக - எத்தனை

வயதானாலும் உங்கள் உற்சாகமான குழந்தை மனத்தை இழந்துவிடாமல் காப்பாற்றி வையுங்கள். நம் நாட்டில் வாழ்ந்த இரவிந்திரநாத் தாகூர், பாரதி, கண்ணதாசன் போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப் பாருங்கள். மலர்களைவிட மென்மையான அதே சமயத்தில் மலைகளைவிட உறுதியான இதயத்தை அவர்கள் பெற்றிருந்தது புரியும். நம்முடைய பாரதப் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், விஞ்ஞானி அப்துல்கலாம், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நடிகர் கமலஹாசன் இவர்களெல்லாம் அவர்களுடைய துறைகளைத் தாண்டி, கவிஞர்களாகத் திகழ்கிறவர்கள்.

ஆங்கிலம் கற்றுக் கொள்வதற்குப் பேசிப் பழகுவதும், ஒரு அகராதியும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு நல்ல கவிஞனுக்கு நடைப்பயிற்சியும் அகராதியும். தமிழில் ஒரு பொருளைக் குறிப்பதற்கு நிறையச் சொற்கள் உண்டு. உதாரணத்திற்குச் சூரியனை அருணன், வெய்யோன், பரிதி, கதிரவன், ஆதவன் என்ற பெயர்களாலும் அழைக்கலாம். இவற்றைத் தெரிந்து கொள்வதற்கு நிகண்டுகள் உங்களுக்கு உதவும். இலக்கணப் பிழையின்றி எழுதுவதைக் கற்றுக் கொள்வதற்கு இலக்கண நூல்களும் நம் மூதாதையரின் சங்க இலக்கியங்களும், வழி, வழி வந்த படைப்புகளும் உங்கள் நூலகத்தில் இருந்தே ஆக வேண்டும். இந்த விஷயத்தில் நான் கொடுத்து வைத்தவன். எனது தந்தையார் ஒரு கவிஞர். எனக்கு இலக்கணப் பயிற்சியை ஊட்டியவர் அவர்தான். நீங்கள் புதுக்கவிதை, மரபுக்கவிதை அல்லது திரைப்பாடல் என்று எதை எழுதினாலும் இலக்கணப் பயிற்சி என்ற அடித்தளம் இருந்தால்தான் நீங்கள் எழுப்பும் கவிதை மாளிகை நிலைத்து நிற்கும். இன்று திரைப்படப் பாடல்கள் எழுதும் எனக்கு அன்று பெற்ற இலக்கணப் பயிற்சி அமோகமாக கை கொடுக்கிறது.

மனதில் கற்பனையைத் தூண்டும் எதுவும் உங்கள் கவிதைப் பொருளாகலாம். அதன் அதன் உள்ளார்ந்த பயன்பாட்டைப் புதிய சொல்லோடும், சுவையோடும் விளக்க வேண்டும். முடிவில்லா கற்பனை, முப்பரிமான பார்வை, கூடுமானவரை எளிய சொற்கள், உரிய சொற்களை உரிய இடத்தில் பொருத்துதல், மரபுக் கவிதைகளை இனிய சந்தங்களில் அமைத்தல் ஆகியவற்றில் உன்னிப்போடு இருக்க வேண்டும். இவற்றிற்கு உதாரணமாக திரிகூட ராசப்ப கவியின் குற்றால குறவஞ்சியில் மலைவளம் சொல்லும் 'வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும்' என்று துவங்கும் கவிதை வரிகளைச் சொல்லலாம்.

நிறைய கவியரங்கங்களுக்குச் செல்லுங்கள். ஒரு நல்ல கவிஞன் மற்றவர்களுடைய நல்ல கவிதைகளை அடையாளம் கண்டு ரசிக்க வேண்டும். பாராட்ட வேண்டும். உங்களுக்குள் ஊற்றெடுக்கும் கவிதை வரிகளை உடனே தாள்களில் பதிவு செய்து விடுங்கள். பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள். கவிதைக்கென்றே சிறு பத்திரிகைகள் பல இருக்கின்றன. 'நிலா'வைப் பற்றிய என் முதல் கவிதை 'தென்றல்' என்ற சிறு பத்திரிகையில் தான் வந்தது. சீனாவைச் சிவக்க வைத்த மாசேதுங், வியட்நாமில் வீரம் விளைவித்த ஹோசிமின் இருவரின் கவிதை நூல்

''மன்னர் முடிதுறக்க சம்மதித்து விட்டாராம்.''

"எந்தக் கோயிலுக்கு?"

- எஸ்.மோகன், விருத்தாசலம்



களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு நூல்களாக வெளிவந்திருக்கின்றன. அவற்றைப் படியுங்கள். என்னை முதன் முதலாக மிகவும் கவர்ந்த கவிதைப் புத்தகம் மு. மேத்தாவின் 'கண்ணீர் பூக்கள்'. அந்தப் பாதிப்பில் நான் நிறைய கவிதைகளை எழுதியிருக்கிறேன்.

கவிஞனாக பூத்து மணம் பரப்ப நினைப்பவர்கள், திருக்குறள், பாரதியார் கவிதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், பொன் மொழிகள் ஆகியவற்றை அடிக்கடி புரட்ட வேண்டும். புரட்ட, புரட்ட புதுப் புதுச் சிந்தனைகள் பிறந்து கொண்டே இருக்கும். ஆனால் இப்போதெல்லாம் கம்ப்யூட்டர்களே கவிதை பாட வந்துவிட்டன. ஆர்.சி.ஏ. 301 என்கிற கம்யூட்டர் நிமிடத்திற்கு 150 கவிதைகளை எழுதுகிறதாம். சொற்களை எடுத்துக் கொடுத்தால் அவற்றைச் சரியாகப் பொருத்தி கவிதை மாலையை பிரிண்டரில் தள்ளி விடுகிறதாம் இந்த கம்ப்யூட்டர். ஆனால் காலத்தால் அழிக்க முடியாத ஜீவனுள்ள கவிதை வரிகளை அந்த கம்ப்யூட்டரால் கொடுக்க முடியுமா என்பது சந்தேகமே!

இப்போது ஒரு முக்கியமான விஷயத்துக்கு வருகிறேன். வாழ்வு ரீதியாக - அதாவது பிழைப்புக்காக, கவிதை படைப்பை மட்டும் தொழிலாக வைத்துக் கொள்ள முடியுமா? தற்போதைய நிலையில் சாத்தியமில்லை என்று தான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் உங்களுக்குள் இருக்கிற கவிதை வளம், திரைப்படத் துறையில் பாடலாசிரியராக காலூன்றும்போது தொழில் ரீதியாக வளர மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

நீங்கள் முக்கியமாக மனதில் வைக்க வேண்டிய ஒரு விஷயத்தை இறுதியாகச் சொல்கிறேன். ஒரு கவிஞனுக்குச் சொல் வளம், கற்பனை வளம் இவற்றோடு மொழிப்பற்று, இனப்பற்று, தேசப்பற்று ஆகியவையும் மிக, மிக முக்கியம். சரமாரியாக உங்கள் கவிதைகள் கோகுலத்தை வந்தடையுமா? வாழ்த்துகள்!'

சந்திப்பு : **ப்ரியன்**



வழிகாட்டி பகுதியில் கவிஞராவதற்கு நல்ல டிப்ஸ்களைக் கொடுத்த பழநிபாரதி உங்களுக்காக ஸ்பெஷல் கவிதை ஒன்றையும் அளித்திருக்கிறார்.

மழையே வருக!

மழையே மழையே வருகவே
வாழ்வில் இன்பம் தருகவே

உழவர் வாழ்வு சிறக்கவே
உலகில் இன்பம் கொழிக்கவே
மழலைச் செல்வம் மகிழவே
வானத் தமுதே வருகவே

மழையே மழையே வருகவே
வாழ்வில் இன்பம் தருகவே

சோலை பூத்துக் குலுங்கவே
சூழ்ந்த வறட்சி தொலையவே
பாலைப் பொழியும் பசுவனம்
பயன்கள் தந்து செழிக்கவே

மழையே மழையே வருகவே
வாழ்வில் இன்பம் தருகவே

காடு கழனி விளையவே
கடிய வெப்பம் குறையவே
நாடு நல்ல வளங்களை
நன்கு பெற்றுச் சிறக்கவே

மழையே மழையே வருகவே
வாழ்வில் இன்பம் தருகவே

பள்ளிகளில் போட்டிகள்

உலக சமாதானம்



அணு ஆயுதங்கள் தயாரிப்பு, இனக்கலவரம் என பல்வேறு பிரச்னைகள் உலகை அச்சுறுத்தி வருகின்றன. இவ்வேளையில் தி. நகர் மாநகராட்சி பள்ளியில் 'உலக சமாதானம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தினோம். ஆர்வத்துடன் ஏராளமான மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுகள் வழங்கப்பட்டன. அன்பாலும் அமைதியாலும் உலக சமாதானத்தை நிலை நாட்டலாம் என்ற கருத்தை வலியுறுத்திய கே. பாலாஜியின் (ஒன்பதாம் வகுப்பு) முதல் பரிசு பெற்ற ஓவியம் இங்கு பிரசுரமாகியுள்ளது.

மாணவ, மாணவியரே உங்கள் பள்ளியில் இதுபோன்ற போட்டிகளை நடத்த வேண்டும் என்றால் நீங்களோ, உங்கள் ஆசிரியர்களோ அல்லது தலைமை ஆசிரியரோ கோகுலத்தைத் தொடர்பு கொள்ளலாம்.



புதிர் உலகம்

I. என் நண்பர்கள் நான்கு பேரைத் தனித் தனியே 3ஆல் வகுபடும், 5ஆல் வகுபடும், 7ஆல் வகுபடும், 9ஆல் வகுபடும் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொன்னேன். என்ன ஆச்சரியம். நால்வரும் ஒரே எண்ணையே நினைத்துக் கொண்டனர் எனில் அந்த எண் என்ன?

- **பெ. நடராசன், 9ம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.**

II.

இ	ப்	சா	சா	ந்
வி	ந்	ரு	ப	க
தி	வை	கி	கே	தி
ஷ்	ஞ்	ரா	கா	ம்
சி	ளா	ர	ணா	கா

மேலே உள்ள கட்டங்களில் ஐந்து பெயர்கள் ஒளிந்து இருக்கின்றன. அவற்றிற்கான குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கண்டு பிடியுங்கள்.

1. இந்தியாவில் அதிக நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள மாநிலம்.
2. கோகோ தயாரிப்பில் முதலிடம் வகிக்கும் இந்திய மாநிலம்.
3. அமராவதி என்ற நகரம் இந்த நதிக்கரையில் அமைந்துள்ளது.
4. வங்கிகளைத் தேசிய மயமாக்கிய பிரதமர்.
5. முருகக் கடவுளும், புத்தர் பெருமானும் அவதரித்த தினத்தை ------- என்று கூறுவர்.

- **க. தமிழ்ப் பொழில், நீடாமங்கலம்.**

III. சேகர், சுந்தர், பாஸ்கர் ஆகிய மூவரும் செய்த வேலைக்குக் கூலியாக மொத்தம் 575 ரூபாய் வந்தது. இதில் சேகர் சுந்தரைவிட 19 ரூபாய் அதிகமாகக் கூலி வாங்கினான். சுந்தர் பாஸ்கரை விட 17 ரூபாய் அதிகமாகக் கூலி வாங்கினான். இந்த மூன்று பேர் வாங்கிய தனித்தனி கூலிப்பணம் எவ்வளவு?

IV. ஒரு பழைய புத்தகத்திலிருந்து 6, 7, 42, 89, 90 ஆகிய பக்கங்களை கிழிக்கிறீர்கள். இப்போது உங்கள் கையில் எத்தனை தாள்கள் இருக்கும்?

V. வாணி சிங்கத்திடமும், கரடியிடமும் பேசிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் சிங்கம் பொய் சொல்லும் என்றும் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கரடி பொய் சொல்லும் என்று. அப்போது சிங்கம், "நேற்று நான் பொய் சொல்லும் நாள்" என்றது. கரடியும், "நேற்று நான் பொய் சொல்லும் நாள்" என்றது. அப்படியென்றால் வாணி சிங்கத்தையும், கரடியையும் எந்தக் கிழமையில் சந்தித்தாள்?

- **எம். வினோத், விருதாச்சலம்**

விடை : 64ஆம் பக்கம்


பிரபு, தீபக், ஜான் மூவரும் நண்பர்கள்~
தீபக், நம்ம ஸ்கூல்ல சிறுசேமிப்புத் திட்டத்துக்கு உன்னைத் தலைவனாப் போட்டிருக்காங்களே, இப்ப எத்தனை பேர் சேர்ந்திருக்காங்க?
ஏதோ பரவாயில்லை... ஆனா...
என்ன ஆனா?
..இதோ நம்ம ஃப்ரெண்ட் - இவனையே சேமிப்புத் திட்டத்தில சேர்க்க முடியலியே!
சேமிப்பு அவசியம்?
கதை: ராமகிருஷ்ணன்
படம்:
ஏண்டா பிரபு இப்படி?
எவ்வளவோ எடுத்துச் சொல்லிட்டேண்டா அவனுக்கு...
பாக்கெட் மணின்னாலே அது செலவு பண்ணத் தானேடா!
செலவு பண்ணு...
... ஆனா எஞ்சிய கொஞ்சத்தைத் தானே சேமிக்கச் சொல்றோம்.. பணம் கையில் இருக்கும்போது கொஞ்சத்தை சேமிக்கணும், அவ்வளவுதான்.
போங்கடா.. சேமிப்பும் நீங்களும். எனக்கு முடியாது. ஆளை விடுங்க!
அவனை விடு, ஜான்.. அவனா விரும்பி சேர்ந்தாத் தான் நல்லது.
ஆமா..!


பிரபு அன்று இரவு படிக்க.. உட்கார்ந்தான். திடீரென் கரண்ட் போனது—
ஐயோ.. நாளைக்கு டெஸ்டெல்லாம் இருக்கு... என்ன பண்றது?.. அப்பா... அப்பா...!
திரும்ப கரண்ட் வர ரொம்ப நேரமாகுமே!
எப்படிப்பா?
அங்கேயே இருடா பிரபு. இப்பப் பார் லைட் எரியும்!
ஹை!
இன்றுதான் வாங்கினது... எமர்ஜென்ஸி லைட்...
மின்சாரம் இருக்கும் போது சேமித்து வைத்துக்கொண்டு கரண்ட் இல்லாத போது எரியும்!
மறுநாள் பள்ளியில்—
தீபக் இந்தா— எனக்கு ஒரு சேமிப்பு அட்டை கொடு!
பேசுவது பிரபு தானா!
எப்படியோ மனம் மாறினானே.. தாங்க்ஸ் பிரபு!



தமிழ் தாத்தா யார்?

எங்கள் தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கையில் "தமிழ் தாத்தா யார்?" என்று கேட்டார். வேகமாக எழுந்த என் நண்பன், "வேலு சார்" என்றான். ஆசிரியர் தவறு என்று சொல்ல, நண்பனோ "நான் சொன்னது சரிதான் சார். நம்ம வகுப்பு தமிழின் தாத்தா பெயர் 'வேலு'தான்'' என்று கூற வகுப்பறை சிரிப்பலையில் மிதந்தது. எங்கள் சிரிப்பலையில் ஆசிரியரும் கலந்து கொண்டார். சிரிப்பதைப் பார்த்து தவறை உணர்ந்து கொண்ட நண்பன் "உ.வே.சாமிநாத ஐயர்" என்று கூறி அமர்ந்தான்.

- ஹ. அருண்குமார், 10ம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்

ஏன் வீழ்ந்தது?


எங்கள் சமூக அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவர் ''மொகலாயப் பேரரசு ஏன் வீழ்ந்தது என்று தெரியுமா?'' என்று கேட்டார். உடனே ஒரு மாணவன் ''யாராவது தள்ளிவிட்டு இருப்பாங்க சார்'' என்று கூற வகுப்பறையே சிரித்தது. ''இப்படியே பதில் சொன்னால் இந்த வகுப்பிலிருந்து உன்னைத் தள்ளிவிட நேரிடும்'' என்று ஆசிரியர் எச்சரித்து, பாடத்தைத் தொடர்ந்தார்.

- பெ. நடராசன், 9ம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப்
பள்ளி, மேலச்சீத்தை,
இராமநாதபுரம்



'சா'வுக்கு எத்தனை மாத்திரை?


எங்கள் வகுப்பில் ஒரு நாள் தமிழாசிரியர், இலக்கணப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதில் மாத்திரைகளைப் பற்றி மிகவும் கஷ்டப்பட்டு அனைவருக்கும் புரியுமாறு கூறிக் கொண்டிருந்தார். ஒரு மாணவன் கணித ஆசிரியர் முதல் நாள் கொடுத்த வீட்டுப் பாடத்தைச் செய்து வர மறந்து விட்டான். எனவே, அவன் பாடத்தைக் கவனிக்காமல் வீட்டுப் பாடத்தைச் செய்து கொண்டிருந்தான். அவன் பாடத்தைக் கவனிக்காததை அறிந்த ஆசிரியர் அவனை எழுப்பி, '' 'சா'வுக்கு எத்தனை மாத்திரை?'' என்று கேட்டார். அவன், ''இருபது அல்லது முப்பது தூக்க மாத்திரை'' என்றான். வகுப்பே சிரிப்பு மழையில் நனைந்தது. உடனே அவன் மன்னிப்புக் கேட்டு விட்டுப் பாடத்தைக் கவனிக்க ஆரம்பித்தான்.



- எம். வினோத்,
விருதாச்சலம்

எங்கள் பள்ளியில் நடந்தது!






வராண்டா...

எங்கள் பள்ளியின் திண்ணையில் அமர்ந்து மதிய உணவு அருந்த ஆரம்பித்தோம். அப்போது எங்களோடு அமர்ந்திருந்த ஒரு மாணவன், 'வராண்டா, வராண்டா' என்று சொல்ல நாங்கள் "யாரு வர்றாங்க?" என்று கேட்டோம். அந்த மாணவன் "ஒருத்தரும் வரலை. நாம உட்கார்ந்திருக்கிற திண்ணைக்கு இன்னொரு பேரு 'வராண்டா'ன்னும் சொல்வாங்களே. அதைத்தான் சொல்லிப் பார்த்தேன்" என்று கூற அனைவரும் புன்னகை சிந்தினோம், சாதத்தைச் சிந்தாமல்.

- சி. ராஜசேகரன், ராஜபாளையம்

கால்?

அறிவியல் வகுப்பு. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவன் கவனிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி "பாம்புக்குக் கால் உண்டா?" என்று கேட்டார் ஆசிரியர். "பாம்புக்குக் கால் உண்டு சார்" என்றான் அவன். வியந்த ஆசிரியர் "எத்தனை கால்கள்?" என்று கேட்டார். உடனே அவன், சாக்பீஸை வாங்கி 'பாம்பு' என்று எழுதி "ஒரு கால் தான் வருது சார்" என்றான். நாங்கள் சிரிக்க, ஆசிரியர் கோபப்பட்டார்.



"இது தமிழ்ப் பாட வேளை இல்லை. அறிவியல் பாட வேளை. ஒழுங்கா கவனி" என்று கூறி உட்கார வைத்தார்.

- சி. சுதாகர், துத்திப்பட்டு

லீவ்...

எங்கள் வகுப்பாசிரியர் மிகவும் கண்டிப்பானவர். லீவ் லெட்டர் கொடுக்காமல் லீவ் எடுத்தால் தண்டனை கொடுப்பார். என் நண்பன் ஒரு நாள் லீவ் லெட்டர் கொடுக்காமல் லீவ் எடுத்து விட்டு மறு நாள் பள்ளிக்கு வந்தான். ஆசிரியர் கோபத்துடன் அவனிடம் "ஏன் நேற்று பள்ளிக்கு வரலை?" என்றார். அவன் "அம்மாவுக்குப் பயங்கர காய்ச்சல் சார்" என்றான். "அம்மாவா படிக்கிறாங்க? நீதானே படிக்கிறே?" என்று கேட்டார் ஆசிரியர். "வீட்டில் யாரும் இல்லை. அப்பா ஊருக்குப் போயிருந்தார். நான் தானே சார் கவனிச்சிக்கணும்" என்று அவன் கண்கலங்க ஆசிரியர் தட்டிக் கொடுத்து உட்கார வைத்தார்.

- கிருஷ்ணன், புதுக்கோட்டை.





அந்த மாணவர்கள் மேற்கு மலையின் அடர்வன ஒற்றையடிப் பாதையில் ஏறி நடந்துகொண்டிருந்தார்கள்.

முதலில் சென்றது காட்டுவாசிச் சிறுவன் நீலன், தலைப்பாகையுடன் சட்டை இல்லாத உடம்புடன் இடுப்பு வேட்டியைக் கோவணம் பாச்சிக் கட்டியிருந்தான். ஒற்றையடிப் பாதையில் உருட்டுக் கற்களும் மர வேர்களும் ஆங்காங்கே தரையோடு பொருந்தியிருந்ததால் தட்டி விழாமல் இருக்க பார்த்துப் பார்த்து மெல்ல நடந்தனர்.

''நீலா அதோ பாரு அங்கே மயில் தோகை'' – ஒரு மாணவன் கூறியதும் நீலன் திரும்பி வந்தான்.

''சாமி அது புதருக்குள்ள இருக்கு. நீங்க யாரும் போக வேண்டாம். நான் போய் எடுக்கறேன்.''

நீலன் புதருக்குள் குனிந்து சென்று ஐந்தாறு மயில் தோகைகளை எடுத்து வந்து ஆளுக்கொன்றாகத் தந்தான்.

''ஆஹா! எத்தனை நிறத்துல எவ்வளவு அழகாயிருக்கு! மேல் கறுப்பு வட்டம் கண்ணு மாதிரியே இருக்கே.''

''சாமி இதைப் பத்திரமா வச்சிக்கோங்க, வீட்டுக்கு ஒரு மயில் தோகை கட்டாயம் இருக்கணும் சாமி. அவ்வளவு நல்லது இது''

''என்னப்பா விவரமா சொல்லேன்'' – கண்ணன்.

''சாமி வண்டுக்கடி, பூச்சிக்கடி விஷங்களுக்கு மயில்தோகை அடிப்பகுதியை ஒரு குவளை பாலில் விட்டு கடையற மாதிரி ஆட்டி அந்தப் பாலைச் சாப்பிட்டால் உடனே விஷம் இறங்கும்.''

''பரவாயில்லையே, அற்புதமான மருந்தில்லே இது'' – கண்ணன்.

''மயில் இறகு விசிறியால் விசிறினா உடல்வலி போகும். அசதி மாறும், உடம்புக்குக் குளிர்ச்சி வரும். இறகு சுட்ட சாம்பல் தேனுல கலந்து சாப்பிட்டால் விக்கல், இருமல், சுபம் போகும்''– நீலன்.

''சரிப்பா, நீலன் சொன்னது போல இதைப் பத்திரமா வீட்டுக்கு எடுத்துட்டுப் போவோம்'' – பேசிக்கொண்டே அவர்கள் நடந்தனர்.

எங்கிருந்தோ கரு மந்திகளின் 'குக்குக்' சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. வனமெங்கும் சில் வண்டுகளின் இசை நாதம். மெல்லிய மழைத் தூறலுடன் மேகம் வந்து அவர்களை அணைத்துப் பார்த்து, விட்டு விட்டுப் போய்விட்டது. மரங்களின் இலைகளிலிருந்து சொட்டும் மழைத்துளிகள் கீழே சருகுகளில்

கொ.மா. கோதண்டம்



"அட பாட்டு அருமையா இருக்கே. இது யாருப்பா எழுதுனது?" – அகிலன்.

"நாங்களா சும்மா பாடுவோம் இட்டுகட்டி. எங்க அப்பன், ஆத்தா, பாட்டன், பாட்டி எல்லாரும் பாடுன பாட்டு இது" – நீலன்.

அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். ஏதோ காட்டு மரம் நிறையப் பூத்து அழகுடன் காட்சியளித்தது. அவர்கள் அங்கேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். மரத்திலிருந்து சில தேனீக்கள் பறந்து சென்றன. நீலன் அதன் பின்னாலேயே சிறிது தூரம் ஓடினான். ஒரு பாறையில் உள்ள சின்ன ஓட்டைவழியே ஈக்கள் உள்ளே சென்றன. உள்ளிருந்தும் சில தேனீக்கள் வெளியே வந்து அந்த மரம் நோக்கிப் பறந்து சென்றன.

மந்திர வேர்

பட்டுச் 'சளக் சளக்'–கென தாளம் போட்டுக் கொண்டிருந்தது.

"ஏம்பா நீலா, தோகை சிதறி கிடந்ததே மயிலைக் காணோமே?" – இளங்கோ"

"சாமி, இந்தப் புதர் அது தங்குற இடம். இப்ப இரை தேடப் போயிருக்கும்."

எங்கிருந்தோ 'பீ...காக்' என மயில் கூவும் சத்தம் கேட்டது.

"அதோ பாருங்க சாமி மயில் கூவுது"

"அட ஆமா...! சரி மயிலைப் பத்தி சொல்லேன்."

"எனக்குத் தெரியாது சாமி. மயில் பாட்டு வேணா பாடுறேன்."

அவன் தொண்டையைச் சரி செய்து கொண்டு பாடினான்:

"கூவுது கூவுது பச்சை மயில்
பெட்டையெ கூப்புட கூவும் மயில்
உச்சி மரமேறி கூவும் மயில்
ஊரெல்லாம் கேட்டுட கூவும் மயில்"

"சாமி கொஞ்சம் இருங்க, நான் எங்க குடிசை வரைக்கும் போயிட்டு உடனே வந்துடறேன்" – சொல்லிவிட்டு நீலன் ஓடினான்.

"என்னப்பா நம்மள ஒத்தையிலே வனத்துல விட்டுட்டு ஓடிட்டானே" – கண்ணன்.

"ஏய் இத்தனை பேரு இருக்கோம். ஒத்தையா இது. இப்ப வந்திடுவானில்லே?" என்றான் அகிலன்.

நீலன் ஒரு தகர டின்னுடன் ஓடி வந்து கொண்டிருந்தான். கையில் ஒரு வெள்ளைத் துணியும் இருந்தது. கள்ளிகளைச் சேகரித்து பாறையில் ஓட்டைக்கு முன்பு தீப்பந்தம் வைத்தான். எரிந்து முடிந்ததும் புகை



''அப்பா... நமக்கு ஒரு கார் வாங்கணும்பா''

''அதெல்லாம் நடக்குமாடா? நடக்குறதா சொல்லுடா.''

''நமக்கு ஒரு யானை வாங்கணும்பா!''

– மு. பெரியசாமி

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

'குபுகுபு'வென கிளம்பியது. அதனை அந்த ஓட்டைக்குள் போகுமாறு சாய்த்துப் பிடித்தான். ஏதோ பச்சிலையை வாயில் போட்டு மென்று அதையும் ஓட்டை வழியே ஊதினான்.

உள்ளே இருந்து தேனீக்கள் 'ங்கொய்' என்ற சத்தத்துடன் வெளியே பறந்து வந்தன. கையிலிருந்த அரிவாளால் அந்த ஓட்டைப் பகுதியைத் தட்டி உடைத்துப் பெரிதாக்கினான். பின் உள்ளே கையை விட்டு வெளியே எடுத்தான். கையில் பிய்ந்த தேனடை இருந்தது. அதேபோல் ஐந்தாறு தடவை துணியில் எடுத்துப் போட்டதும் துணியைத் தகர டின்னில் பிழிந்தான். சிறிது நேரத்தில் டின் நிறைந்தது. மாணவர்களின் கைகளிலும் தேனைவிட்டுப் பருகச் சொன்னான்.

''ஆஹா, என்ன அருமையான ருசியாக இருக்கு!'' என்றனர் ஒரே குரலில் மாணவர்கள்.

''சாமி இது பாறை புடைத் தேன். சின்ன வகைத் தேனீக்கள்தான் இதுல போயி கூடு கட்டும். இந்தத் தேனுதான் ரொம்ப உசத்தி. உடம்புக்கு ரொம்ப நல்லது.''

''இதை நீ என்ன செய்வே நீலா?'' – இளங்கோ.

''யாரும் அதிக விலைக்குக் கேட்டால் வித்திடுவோம். ஒரு பாட்டில்ல உங்களுக்கும் தேனை ஊத்தித் தரேன். நீங்க ஆளுக்குக் கொஞ்சமா எடுத்துக்குங்க'' – நீலன்.

''சரி நீலா, ரொம்ப நன்றிப்பா'' – என்றனர் மாணவர்கள்.

''நீலா, இன்னிக்கு நாங்க வந்ததே உனக்கு நன்றி சொல்லத்தாம்பா! உன்னுடைய ஆலோசனையால்தான் ரவியும் குமாரும் பரீட்சையில் பாஸானாங்க. அதுக்குதான் உனக்கு இரண்டு பேரும் சட்டை, வேட்டி, கம்பளி வாங்கி வந்தாங்க'' என்று கூறினான் கண்ணன்.

''சாமி உங்களுக்கு சுலோகமுன்னு ஒண்ணு தந்தேனே. அது அருவியில் குளிக்க வந்த வாத்தியார் சொல்லிக் குடுத்தாங்க. நான் எழுதி வாங்கி வச்சிருந்தேன். அதைத்தான் உங்ககிட்ட குடுத்து நித்தம் இதைப் படிச்சிட்டு அப்புறம் பாடம் படிங்கன்னு சொன்னேன்.''

''அப்புறம் ரவியும் குமாரும் போன வருசம் ஒம்பதுல ஃபெயிலுன்னு உங்கிட்ட கூட்டி வந்தோம். நீ இந்த சுலோகம் தந்ததோடு உங்க தாத்தா மந்திரிச்சிக் கொடுத்த வேரு இரண்டு பேருக்கும் கொடுத்தே. அவங்க அதைப் பையில் போட்டுக்கிட்டாங்க. இப்ப பாஸ் ஆயிட்டாங்க.''

''சாமி எங்க தாத்தா மந்திரிச்ச மந்திர வேரை உங்ககிட்ட கொடுத்தபோது இதை வச்சிக்கிட்டு படிக்காம இருந்திடக் கூடாது. நீங்க நல்லா படிச்சாதான் மந்திர வேரும் வேலை செய்யுமுன்னு நான் கொடுத்தேன். உண்மையைச் சொன்னா எங்க தாத்தா கிட்டயே நான் போகலை. பாதையில் கிடந்த வேரை எடுத்தாந்துதான் மந்திர வேருன்னு பொய் சொல்லித் தந்தேன். நீங்களும் நல்லா படிச்சி பாஸாயிட்டீங்க. மந்திர வேரு வேல செஞ்சதா நெனைச்சிட்டீங்க. மந்திர வேருமில்லே, மண்ணாங் கட்டியுமில்லே'' என்றான் நீலன்.

''ஏய், உனக்கு இப்படியெல்லாம் ஏமாத்த கூடத் தெரியுமா? அடடா எல்லாரையும் மந்திரவேருன்னு சொல்லி உண்மையிலேயே நம்ப வச்சிட்டியே'' வியப்புடன் கூறினான் கண்ணன்.

''சாமி பொய் சொல்லுறதாலே யாருக்கும் கஷ்டம் வரக் கூடாது. பொய்தான் உங்களுக்கு உதவியிருக்கு.''


''நீ பெரிய ஆளுதாம்பா நீலா'' – அகிலன்.

''சரி சாமிகளா எந்திரிங்க கீழே இறங்கலாம்'' – நீலன்.


அவர்கள் கீழே இறங்கி நடக்கலானார்கள்.


பாதுகாப்புக் கவசம்!

சில உயிரினங்கள் வலிமை வாய்ந்ததாகவும், சில உயிரினங்கள் வலிமையற்றும் காணப்படுகின்றன. வலிமையற்ற சாதார்ண உயிரினங்கள் தங்களைக் காத்துக் கொள்வது எப்படி? இப்படிப்பட்ட உயிரினங்களுக்கு இயற்கை பாதுகாப்புக் கவசங்களை அளித்துள்ளது. இதன் மூலம் எதிரியிடமிருந்து தப்பிக்கவும் எதிர்த்துப் போரிடவும் முடிகிறது.




முள்ளம்பன்றியின் உடல் மென்மையானது. அவற்றின் உடலை முட்கள் தான் கவசமாக இருந்து பாதுகாக்கின்றன. முட்கள் இல்லாவிட்டால் முள்ளம்பன்றி எதிரிக்கு எளிதில் இரையாகிவிடும். இந்த முட்கள் எதிரி மேல் பட்டால் ஆழமான காயத்தை ஏற்படுத்தக் கூடியவை.





மெதுவாக நகரும் பிராணி ஆமை. இவற்றால் எதிரியிடமிருந்து தப்பி ஓட முடியாது. ஆமைக்குப் பாதுகாப்புத் தருவது அவற்றின் ஓடுதான். ஏதேனும் ஆபத்தை உணர்ந்தவுடன் ஆமை கால்களையும் தலையையும் உறுதியான ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டு தப்பி விடும்.

சிப்பி மற்றும் நத்தைகளுக்கும் ஓடு உண்டு. இவற்றின் உடல் மிகவும் மென்மையானது. உடலைச் சுற்றி சுண்ணாம்புப் பொருளால் ஆன இந்த ஓடுதான் பாதுகாப்பு அரணாக விளங்குகிறது.







மழைக்காலங்களில் தோட்டத்தில் ஊர்ந்து கொண்டிருக்கும் மரவட்டையைப் பார்த்திருப்பீர்கள். இவற்றுக்கும் மேல்புறம் செதில்போன்ற பாதுகாப்புக் கவசம் உண்டு. குச்சியால் தட்டினால் ரயில் போல சென்று கொண்டிருந்த மரவட்டை சட்டென்று உடலைச் சுருட்டி, வட்ட வடிவமாகி அசையாமல் நின்று விடும்!

நண்டின் உடல் முழுவதும் ஓடால் மூடப்பட்டிருக்கும். இந்த ஓடு கடினமாக இருக்காது. ஆனால் நண்டின் முன் இரண்டு கால்களிடம் எதிரி அகப்பட்டால் அவ்வளவுதான்!




கடல் குதிரை கடலின் ஆழத்தில் வசிக்கக் கூடியது. இவற்றின் தலையிலும், முதுகிலும் கூர்மையான முட்கள் உள்ளதால் இவை பெரிய பிராணிகளிடமிருந்து கூட சுலபமாகத் தப்பி விடுகின்றன.







சில பூச்சிகளுக்கும் வண்டுகளுக்கும்கூட கடினமான ஓடு உண்டு. இந்த ஓடு 'சிட்டின்' என்ற பொருளால் ஆனது. இது



ஆபத்தை உணரவும், தண்ணீரிலிருந்து பாதுகாக்கவும் உதவுகிறது.









முதலைக்குக் கடினமான ஓடு பல கண்டங்களாகக் காணப்படும். இந்தக் கண்டங்களால் முதலை சுலபமாக உடலை வளைத்து நீந்திச் செல்லவும் தன்னைக் காத்துக் கொள்ளவும் முடிகிறது.

மீன்களுக்குப் பொதுவாகக் கவசங்கள் கிடையாது. ஆனால் டிரங்க் ஃபிஷ் என்ற மீனுக்கு மட்டும் கடினமான, புள்ளியுள்ள, அழகான கவசம் உண்டு. இக்கவசம் காரணமாக இதனால் விரைவாக நீந்தவோ, உடலைத் திருப்பவோ இயலாது. ஆனால் பாதுகாப்புப் பெறுகிறது.





ஆர்மடில்லோ எனப்படும் தென் அமெரிக்க விலங்கும், வேறு சில எறும்புத் தின்னிகளும் தடித்த ஓடுடைய விலங்குகளே. இவை எதிரியைக் கண்டவுடன் பந்து போல் உடலைச் சுருட்டி அசையா மல் இருந்து தப்பி விடுகின்றன.



இரட்டைப் பரிசு!

அழ. வள்ளியப்பா நாடகப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற நாடகம்

காட்சி - 1

(நஸீர், ஜான், கணபதி, வேலுச்சாமி ஆகிய நால்வரும் நண்பர்கள். ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள். ஒருநாள் மாலை வேளை நண்பர்கள் கூடினர்.)

நஸீர் : ஜான்! இன்று அசெம்பிளியில் நமது ஆசிரியர் குஜராத் பூகம்பத்தைப் பற்றி கூறியபோது என் உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சுடா.

கணபதி : எனக்கு அழுகையே வந்திடுச்சு. பாவம்டா! என்ன அழிவு இது. ரொம்பப் பரிதாபம்டா.

ஜான் : எனக்கும், ஆசிரியர் சொல்லச் சொல்ல அழுகை அழுகையாய் வந்திரிச்சு. கடவுள் ஏன் இப்படி வதைக்கிறாரோ தெரியலை.

வேலுச்சாமி : வீட்டுக்குள்ளேயே நசுங்கிப் போயிட்டாங்களாம். நாம அவங்களுக்கு ஏதாச்சும் செய்யணும்னு ஆசிரியர் சொன்னாங்க. நாம என்னடா செய்ய முடியும்?

நஸீர் : நாமும் செய்யலாம். சிறு துளி பெரு வெள்ளம்னு சொல்லுவாங்க. இயன்றதைச் செய்வோம். இரண்டு நாள் கழித்து நம்ம ஊருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வருகிறார். அதற்குள்ளே ஏதாவது



செய்வோம்.

நஸீர் : கணபதி, நீ என்ன செய்யப் போறே? யோசனை ஏதாவது வருதா? நான் பள்ளி சஞ்சைய்க்காலே கொஞ்சம் பணம் சேர்த்து வச்சிருக்கேன். சைக்கிள் வாங்கணும்னு நினைச்சு சேர்த்து வச்சேன். அதைக் கொடுத்துவிடலாம்னு நினைக்கிறேன். எப்படி என் ஐடியா?

ஜான் : நஸீர், நீ சொல்றதைக் கேட்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்குடா! நாம கொடுக்கிற ஒவ்வொரு பைசாவும் அவங்களுக்குப் பெரிய உதவியாயிருக்கும். நஸீர் யூ ஆர் வெரி கிரேட்.

கணபதி : ஆமாண்டா! எனக்கும் ஏதாவது கொடுக்க ஆசையாய் இருக்குதுடா. எங்க அம்மாகிட்டே கேட்டுட்டு கொண்டு வர்றேன்.


ஜான் : எனக்கு கிறிஸ்துமஸுக்கு 4 புதுசட்டைகள் கிடைத்தது. அதிலே மூன்று சட்டைகளை அம்மாகிட்டே கேட்டு வாங்கிட்டு வந்துடுறேன், என்ன?

வேலுச்சாமி : எங்கப்பா விவசாயம் பண்றாங்க. கேட்டாலும் எதுக்கும் பாரு. முயற்சி செய்றேன்.

கணபதி : சரி, நேரமாயிடுச்சு. எல்லாரும் என்னென்ன கொண்டு வர்றீங்களோ பார்ஸல் பண்ணி பெயர் எழுதி வேலு வீட்டிற்கே கொண்டு வந்துடுங்க. அங்கிருந்தே நாம் போவோம். என்ன? அவன் வீடுதான் மைதானத்துக்குப் பக்கத்திலேயே இருக்குது.

வேலுச்சாமி : சரிடா. நாளைக்கு வந்துடுங்க.

ஜெ. ஆனிமேக்தலின்



காட்சி - 2

(மறுநாள் மதிய வேளை. நண்பர்கள் நான்கு பேரும் சாப்பிட அமர்ந்தனர்)

ஜான் : டேய் வாங்கடா! ரொம்பப் பசிக்குது. எல்லாரும் என்ன கொண்டாந்திருக்கீங்க? வேலுச்சாமி முதலில் உன் டிபன் பாக்ஸைத் திற.

வேலுச்சாமி : எங்கம்மா, இன்னிக்கு ஆப்பம் செய்தாங்க. எல்லாருக்கும் சேர்த்து கொடுத்தாங்க.

கணபதி : எனக்

குத் தாடா சீக்கிரம். எனது வெண் பொங்கலைப் பிடி, இந்தா.

ஜான் : எங்கம்மா நாலு டிரஸ்ஸையும் கொடுக்கச் சொன்னதுமல்லாமல் நல்லா பேக் பண்ணி என் பெயர், பள்ளி பெயர் விவரமா எழுதி வச்சிட்டாங்க! நஸீர், நீ?

நஸீர் : நேற்று சஞ்சைய்க்கா பணம் கேட்டு அப்ளை பண்ணிட்டேன். இன்னிக்குச் சாயந்திரம் வாங்கி கவர் போட்டு வேலு அம்மாவிடம் ஒப்படைத்து விடுவோம். அவங்க பத்திரமா வச்சிருப்பாங்க. கணபதி உன் பங்கு என்ன?

கணபதி : எங்க அம்மா என் பிறந்த நாளுக்குச் சேர்த்த பணம் 200 ரூபாயைக் கொடுக்கச் சொல்லிட்டாங்க.

வேலுச்சாமி : எங்கம்மா நெய்யும், 5 கிலோ பச்சரிசியும் தந்தாங்க. இவ்வளவுதான் என் பங்கு. போதுமா?

ஜான் : போதும்டா. இதையெல்லாம் நாமே நேரடியாக நம்ம பள்ளி மைதானத்திற்கு வரும் மாவட்ட ஆட்சியாளரிடம் நாளைக் கொடுத்து விடலாமென நமது ஆசிரியர் கூறியிருக்கிறார். மாலையில் சந்திப்போம்.

"ரோட்டுக்கு நடுவுல எதுக்கு வாழை மரத்தை நட்டு வெச்சிருக்கீங்க?"
"நீங்க தானே சார் 'தார்' போடணும்னு சொன்னீங்க!"

- வெ. பாலவினோதன், குறிஞ்சிப்பாடி



காட்சி - 3

(வேலு வீடு, இரவு நேரம். வேலுச்சாமியின் தாய் நஸீர் கொடுத்த பணம் 750 ரூபாய் கவரையும், கணபதி கொடுத்த 200 ரூபாய் கவரையும் பத்திரமாக பீரோவில் பூட்டி வைக்கிறார். ஜான் கொடுத்த துணி பார்சலையும், மகனது நெய் பாட்டில், அரிசி பையையும் தனியாக வைக்கிறார். அப்போது வேலுவின் அப்பா துரைசாமி அங்கு வருகிறார்.)

துரைசாமி (தனக்குள்) : ஏதோ ஒரு கவரு வள்ளி ஒளிச்சு வைக்கிறாளே? நம்ம பசங்க அந்த குஜராத் பூகம்பத்துக்குச் சேர்த்துக் கொடுத்திருக்காங்க. ம்... சரி, நமக்கு நல்ல வேட்டைதான். நாளைக்குக் குடிக்கிறதுக்குப் பணம் இல்லையேன்னு நினைச்சேன். கெடச்சிடுச்சு. எல்லாரும் தூங்கட்டும். எடுத்துக் கொள்வோம்.

(நடு இரவில் துரைசாமி வள்ளி ஒளித்து வைத்த பணத்தையும் 2 நெய் பாட்டில்களையும் எடுத்து தலைமாட்டில் வைத்துக் கொள்கிறான். நன்றாக தூங்கி விட... திடீரென்று -)

துரைசாமி : ஐயோ, ஐயோ என்னைக் காப்பாத்துங்களேன். வள்ளி, பூகம்பம்... பூகம்பம். வீடு ஆடுது. மூச்சு விட முடியலையே. ம்...ம்... ஏ, வள்ளி கல்லு விழுது. காலு போச்சு. என்னைத் தூக்கு. ஏய்!

(எல்லாரும் ஓடி வர, துரைசாமி கீழே விழுந்து கிடக்க, கட்டில் அவன் மேலே உள்ளது. வேலுவும் வள்ளியும் கட்டிலைத் தூக்கிவிட, ஒளித்து வைத்திருந்த பணக் கவர்களும், 2 பாட்டில்களும் வெளியே தெரிகின்றன.)


வள்ளி : அடப்பாவி மனுஷா! சின்னப் பசங்க அந்த ஏழை மக்களுக்கு வச்சிருந்ததையா எடுத்தே?

துரைசாமி : வள்ளி, கொஞ்சம் தண்ணீர் கொண்டா. இல்லை வந்து, நம் வீடு இடிஞ்சு.. நான் நீங்க... அப்ப நான் கண்டது கனவா? என் மேலே விழுந்தது கல்லு இல்லியா? நான் செத்துப் பிழைச்சேன் வள்ளி. அந்தக் குஜராத் மக்கள் என்ன பாடு பட்டுருப்பாங்க! வேலு, என்னை மன்னிச்சிருடா. வேலு இந்தா பணம், நெய். அதைத் தொடப் போயி என் மேலே....

வேலுச்சாமி : என்னப்பா?

துரைசாமி : நாளைக்கு நானும் வர்ரேம்பா! 5 கி புழுங்கல் அரிசி தர்ரேன்பா. என்ன? நான் செய்த தவறை...

வேலு : சரிப்பா. நான் கூட்டிட்டுப் போறேன்பா.



"என்னை ஆங்கிலத்துல புலின்னு எல்லாரும் பாராட்டுவாங்க!"

"அதெப்படி? ஆங்கிலத்துல 'டைகர்'னுதானே பாராட்டணும்!"

- வெ.பாலவினோதன், குறிஞ்சிப்பாடி

காட்சி - 4

(பள்ளியில் காலை கொடி வணக்கம் நடந்து கொண்டிருக்கிறது)

தலைமை ஆசிரியர் : இன்று நமது பள்ளி மைதானத்திற்கு மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் வந்திருக்கிறார். யாவரும் தங்களால் இயன்ற நன்கொடையை அவரிடம் நேரிடையாக அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாணவர்களிடமிருந்து பொருட்களையும் பணத்தையும் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மைக்மூன் வருகிறார்.)

மா.ஆ.த. : வணக்கம். குஜராத் பூகம்ப நிவாரணத்துக்கு அள்ளித் தந்த அத்தனை பிஞ்சு உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. சென்ற மாதம் ஏரியில் குளித்துக் கொண்டிருந்தபோது இரு சிறுவர்கள் புதைச் சேற்றில் சிக்கிக் கொண்டனர். அவர்கள் இருவரையும் இப்பள்ளியைச் சேர்ந்த நஸீர், கணபதி, வேலு, ஜான் ஆகிய நான்கு மாணவர்கள் மிகுந்த போராட்டத்துக்குப் பின் காப்பாற்றி, கரை சேர்த்தனர். அவர்களுக்கு என்னால் முடிந்த சிறிய அன்பளிப்பை அளிக்கிறேன். வாருங்கள்.

(நால்வரும் மேடை ஏறுகின்றனர்.)

நால்வரும் : நன்றி சார். இந்தப் பரிசுகளையும் நிவாரண நிதியில் சேர்த்துடுங்க. வாங்குறது மட்டும் பரிசில்லை. கொடுக்கிறதும் எங்களைப் பொறுத்தவரை பரிசு கிடைத்த மகிழ்ச்சிதான்.

(பள்ளியே பாராட்ட இரட்டைப்பரிசு பெற்ற மகிழ்ச்சியில் நால்வரும் வீடு நோக்கி நடக்கின்றனர்.)

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

ஆகஸ்ட் இதழில் அறிவித்த 'பிராணிகளின் வால்களைக் கண்டுபிடியுங்கள்' போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பெரும்பாலானோர் சரியான விடைகளையே அளித்திருந்தனர். எனவே குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

1. யானை, 2. குதிரை, 3. கங்காரு, 4. குரங்கு, 5. மாடு, 6. அணில்

கைக்கடிகாரங்கள் பரிசு பெற்றவர்கள்.

1. பி. கார்த்திகா, சென்னை - 82

2. ஆர்.வி.சிந்துப்ரியா, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் (மாவட்டம்)





முதல் பரிசு :

சி.ஜி.வாசுதேவன், பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, இராஜாநகரம்.


இரண்டாம் பரிசு :

என்.எஸ்.கோபால், பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர் மாவட்டம்.






மூன்றாம் பரிசு :
தி. ஆர்த்தி, ஏழாம் வகுப்பு, ஜேஸீஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிவன்மலை, காங்கேயம்.



ஆறுதல் பரிசு :
எ.பென்னட் இமானுவேல், பதினோராம் வகுப்பு, தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின் முறை மெட்ரிகுலேஷன் பள்ளி, தேனி.



ஓவியப்போட்டி முடிவுகள்

பரிசு பெற்ற கார்கள்!

'கார்' என்ற தலைப்பில் ஆகஸ்ட் இதழில் போட்டி அறிவித்ததும் கார் வேகத்துக்கு ஓவியங்களை வரைந்து அனுப்பியிருந் தீர்கள். சாதாரண கார்களிலிருந்து சூப்பர் மாடல் கார்கள் வரை இந்தப் போட்டியில் கலந்து கொண்டன. இவற்றில் பரிசு பெற்ற ஐந்து கார்கள் உங்கள் பார்வைக்கு...


ஆறுதல் பரிசு :
ஆர். பாலகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, சேலம்.



பசும்பாலா

பசும்பாலா?

குடும்பத்துடன் பக்கத்து ஊர் திருவிழாவிற்குச் சென்றிருந்தோம். திடீரென என் தம்பி விஜய பாரதியைக் காணவில்லை. எல்லோரும் பதறிவிட்டோம். நிறைய இடத்தில் தேடிவிட்டு, ஒலிபெருக்கியில் விளம்பரப்படுத்தலாம் என்று அங்கே சென்றால் அவன் அங்கே விளையாடிக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட மகிழ்ச்சியில் பாட்டி அவனை உச்சி மோர்ந்து "இப்பத்தாண்டா என்



வயித்தில பால வார்த்தாய்!" என்றார். அதற்கு அவன் "பசும்பாலா? எருமைப் பாலா பாட்டி?" என்று கேட்டான். பாட்டி முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

ஐயா சாமி!

எங்கள் வீட்டில் நானும் என் தங்கையும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது வீட்டு வாசலில் யாரோ நிற்பதுபோல் தெரியவே, யார் என்று பார்த்துவிட்டு வருமாறு கூறினேன். அவள் வாசலுக்குச் சென்றாள். அங்கே ஒரு பிச்சைக்காரர் நின்று கொண்டு, "ஐயா சாமி! ஏதாவது தர்மம் பண்ணுங்க" என்றார். அதைக் கேட்ட என் தங்கை, "அய்யாசாமி வீடு இது இல்லை. அவர் வீடு அதோ இருக்கிறது" என்று எதிர் வீட்டைக் காட்டினாள். அதைக் கேட்டவுடன் அனைவரும் சிரித்தோம். பிறகு நான் "அவர் அய்யாசாமியைத் தேடி வரவில்லை, நம்மைத்தான் ஐயா சாமி என்றார்" என்று அவளுக்குப் புரிய வைத்தேன்.

– எம். வினோத், விருதாச்சலம்

ஆறிப் போகும்

தம்பி படித்துக் கொண்டிருக்கும்போது அம்மா வந்து காப்பி கொடுத்தார். தம்பி அதைக் குடிக்காமல் இருக்கவே "காபி ஆறிப் போய் விடும். சீக்கிரம் குடி" என்று சொன்னார். "ஆறிப் 'போகாது' காபி. வெகு நேரம் கழித்தாலும் காபி ஆறி 'இருக்குமே' தவிர ஆறிப் 'போகாது' " என்று தம்பி சொல்ல அனைவரும் சிரித்துவிட்டோம்.

– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.



எங்கள் ஊரில் நடந்தது!

எருமைப் பாலா?

காய்!

அன்று செவ்வாய்க்கிழமை. செவ்வாய்க் கிழமை எங்கள் பக்கத்து ஊர் சந்தை. சந்தைக்குப் போய்வரும் அவரவர் அப்பா, அம்மா வாங்கி வரும் தின்பண்டங்களை அன்று பள்ளிவிட்டதும் மாலை கொண்டு வந்து ஒரு இடத்தில் வைத்து தின்போம். அன்று நாங்கள் மூன்று பேர் மற்ற தின்பண்டங்களோடு மாங்காய் வைத்து தின்று கொண்டிருக்க ஒருவன் மட்டும்



மாங்காய் இல்லாமல் பரிதாபமாய் எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். நாங்களும் பிடிவாதமாய் அவனிடம் விளையாடிப் பார்க்க வேண்டி, எச்சில் வடிய தின்ன, ஒரு கட்டத்தில் அந்த நண்பன் பொறுமையிழந்து, "நீங்கள் மட்டும் எனக்கு மாங்காய் தராவிட்டால் நான் உங்களோடு 'காய்'விட்டு விடுவேன். அப்புறம் பழம் என்பதே நமக்குள் கிடையாது. மாங்காய் தந்து நம் நட்பில் காய் விழாமல் பார்த்துக் கொள்ளுங்கள், ஆமாம்" என்றானே பார்க்கலாம்! நாங்கள் சிரித்துவிட்டோம். நட்பில் காயை விரும்பாத நாங்கள் மாங்காயை விரும்பிய நண்பனுக்குக் கொடுத்தோம்.

— ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை

சட்டை...

எங்கள் ஊர் ஒரு சிறிய கிராமம். நான் என் சகோதரியுடன் வீட்டின் பின்புறத்தில் உள்ள தோப்புக்குச் சென்றேன். அங்கு ஒரு பாம்பு சட்டையைக் கழற்றியிருந்தது. நான் "பாம்பு,




சட்டையைக் கழற்றியிருக்கிறது" என்று என் தங்கையிடம் காட்டினேன். அவள் உடனே "இதுதான் பாம்புக்கு கோட் ஸ்டாண்டா?" என்று கூறியவுடன் எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

— எஸ். சுப்பிரமணியன், பாளையங்கோட்டை

படி ஏறமாட்டேன்!

எங்கள் பாட்டிக்குக் கொஞ்சம் முன்கோபம் அதிகம். ஒருநாள் வழக்கம்போல கோபத்தில் "இனிமேல் இந்த வீட்டுப் படியை மிதிக்க மாட்டேன்" என்று கூறிவிட்டுக் கோவிலுக்குச் சென்று விட்டார். ஒரு மணி நேரம் கழித்து திரும்பி வந்தார். உடனே எங்கள் வீட்டுக் கடைக் குட்டி அவசரமாக வண்டியேற்றப் பயன்படுத்தும் சாய்வான மரப்பலகையை எடுத்துப் படிக்கட்டில் போட்டான். நாங்கள் "ஏண்டா இப்படி செய்யறே?" என்று கேட்டதற்கு "அப்பதானே படியை மிதிக்காமல் பாட்டி உள்ளே வரமுடியும்." என்று கூற பாட்டி உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம்.

— ஆர். ஜோதி, மதுரை.



14 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி படம்: லலிதா





குள்ளச்சாமி எங்கே இருக்கிறான்?
அதோ... அந்த மரத்தடியில்...
அவன் வேஷக்காரனாகத்தான் இருக்க வேண்டும். அவனது ஜடாமுடி செம்பட்டையாகவும் தாடி, மீசை கறுப்பாகவும் இருப்பதைப் பார்த்தாயா?
ஆமாம். இப்பொழுதுதான் நன்றாகக் கவனிக்கிறேன்.
அவன் மீது திடீரென்று பாய்ந்து...
கூடாது. மக்கள் உடனே நம் மீது ஆத்திரங் கொள்வார்கள். இதோ பார்த்தாயா?
என்னது? கண்ணாடிக் கற்கள் போலிருக்கே?
வெறும் கண்ணாடிக் கற்கள் இல்லை. பூதக் கண்ணாடிக் கற்கள்.



இது எதுக்கு ஜெயசிம்மா?
இந்தக் கற்கள் மூலம் சூரிய கிரணங்களைக் குவித்து ஒரு பொருள் மீது பாய்ச்சினால் அது தீப்பற்றி எரியும்.
நாம் மூவரும் மரத்தில் ஏறி அமர்ந்து சூரிய கிரணங்களை இதன் மூலம் குவிக்கலாம்.
லைலா நீ குள்ளச்சாமியின் சடைக்குக் குறி வை. சோமு நீ மீசைக்குக் குறி வை. நான் தாடிக்கு...
நல்ல திட்டத்தோடுதான் வந்திருக்கே!
நம் நண்பர்களைக் கூட்டத்தில் கலந்து நிற்கச் சொல்.



நண்பர்களே, நீங்கள் குள்ளச்சாமியின் முன்பு போய் நில்லுங்கள்.
சரி, அப்படியே செய்ய றோம்.
ஆகவே வீரசிம்மனே உங்களுக்கு உகந்த மன்னர்...
ஜெயசிம்மனின் திட்டப்படி சூரிய கிரணங்கள் குவிந்து குள்ளச்சாமி மீது பாய்ந்தன.
ஐயோ என் தாடி மீசையில் நெருப்பு. என்ன பண்றது?
அடடா! சாமியாரின் தாடி, மீசை தீயை அணையுங்கடா...
தொடரும்



மிகவும் வேகமாக ஓடக்கூடிய
பிராணி சிறுத்தை. கண்கள்
ஜொலிக்க யாரை
எதிர்பார்த்திருக்கிறது?


கோகுலம்
போஸ்டர்

'மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி- வழக்கறிஞர்' என்ற பெயர்ப் பலகையைத் தொங்கவிட்டுக் காந்தி பெருமிதத்துடன் வக்கீல் தொழிலை மும்பையில் தொடங்கினார்.

'மமிபாய்' என்ற மாதொருத்தியின் வழக்கை ஏற்று நடத்தும் பொறுப்பைக் காந்தி முதன் முதலில் ஏற்றுக் கொண்டார். அதிக கவனத்துடன் வழக்கு விவரங்களைக் குறித்துக் கொண்டு கோர்ட்டுக்குச் சென்றார்.

எதிர்சாட்சிகளைக் காந்தி விசாரிக்க வேண்டிய கட்டம் வந்தது. பயத்துடன் எழுந்து நின்றார். அவருக்கு உடல் நடுங்கியது. நாக்குக் குழறியது. என்ன பேச வேண்டும் என்பது மறந்தே போய்விட்டது.





வழக்கைத் தம்மால் நடத்த முடியாது என்பதை அவர் கோர்ட்டில் கூறியபோது எல்லோரும் சிரித்தார்கள்.

இவ்விதம் முதல் வழக்கிலேயே தோல்வி அடைந்த காந்தி தனது வக்கீல் தொழிலில் வருவாய் இன்றி விண்ணப்பங்கள் தயாரித்துக் கொடுத்தார். பின்னர் பள்ளி ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பம் அளித்தார். ஆனால் அந்த வேலையும் கிடைக்கவில்லை. இப்படி அச்சமும், கோழைத்தனமுமாக விளங்கிய காந்தியின் வாழ்வில் ஒரு திருப்பம் நேர்ந்தது. காந்திஜிக்கு தென் ஆப்ரிக்கா நாட்டிற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

1893ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மும்பையிலிருந்து கப்பலில் பயணமாகிய காந்தி, மே மாதக் கடைசியில் தென்னாப்பிரிக்காவின் ஒரு பகுதியான நெட்டாலின் துறைமுகமான 'டர்பன்' நகரை அடைந்தார். காந்தியை வரவேற்க அங்கே 'அப்துல்லாசேத்' வந்திருந்தார்.

கப்பலில் இருந்து இறங்கி வந்த காந்தியை அங்கே இருந்த வெள்ளையர்கள் 'ஒரு விசித்திரப் பொருள்போல' நோக்கினர். காந்தி கூடை போன்ற அமைப்பில் தலைப்பாகை அணிந்து கொண்டு நீண்ட அங்கியைப் போன்ற சட்டையை அணிந்திருந்தார்.

இந்தியராகிய காந்தியைத் தென்னாப்பிரிக்காவில் இருந்த வெள்ளையர்கள் சிறிதும் விரும்பவில்லை. இந்தியர்களுக்கு மதிப்பும் மரியாதையும் தரவில்லை. பெரிய பணக்காரரான அப்துல்லாசேத் அவர்களுக்கே வெள்ளையர்கள் உரிய மதிப்பு தரவில்லை.

இதையெல்லாம் காந்தி தென்னாப்ரிக்காவில் கால் வைத்த போதே அறிந்து கொண்டார். இந்தியர்களைத் தீண்டத்தகாதவர் போன்று நடத்தினார்கள். கூலிகள் என்றே அழைத்தார்கள்.

அப்துல்லாசேத், காந்தியை அங்கிருந்த

நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றார். நீதிபதியானவர் காந்தியைப் பார்த்து முதலில் அவரது தலைப்பாகையை எடுத்து விடுமாறு கூறினார். ஆனால் காந்தி அதற்கு மறுத்து விட்டார்.

இந்தியர்களை அவமதிப்பதையே தொழிலாகக் கொண்ட

காந்திஜியின் முதல் வழக்கு!

வெள்ளையர்களின் உத்தரவுக்கெல்லாம் காந்தி பணிய மறுத்தார். தமது தலைப் பாகையோடு நீதிமன்றம் செல்ல தமக்கு உரிமை உண்டு என்பதை விளக்கி பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதினார்.

சில பத்திரிகைகள் காந்தியின் கருத்தை ஆதரித்தன. சில பத்திரிகைகள் காந்தியைக் 'கூலி வழக்கறிஞர்' என வசை பாடின. இதனால் காந்திக்கு எதிர்பாராத விளம்பரம் கிடைத்தது.

தென் ஆப்ரிக்காவில் போர் ஏற்பட்ட போது காந்திஜி அவர்கள் காயமடைந்த வீரர்களுக்கு உதவி செய்ய ஒரு படையைத் திரட்டிச் சென்று சேவை செய்தார். அவரின் தொண்டுள்ளத்தை வெள்ளையர்களும் பாராட்டினார்கள்.

காந்திஜி தென்னாப்ரிக்காவில் இருந்த வரை தலைப்பாகை அணிந்தே வந்தார்.

தென்னாப்ரிக்காவில் காந்தி இருந்த போது, ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற நூலைப் படித்தார். அந்த நூல் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அந்த நூலில் உள்ள கொள்கைகளைக் காந்தி நடைமுறைக்குக் கொண்டு வர விரும்பினார்.

தென்னாப்ரிக்காவில் 'போனிக்ஸ் ஆசிரமம்' கண்டார். அதைப் போலவே தாய்நாடு திரும்பியதும் ஓர் ஆசிரமம் அமைத்தார். அதுவே சபர்மதி ஆசிரமம் ஆகும்.

தமது சபர்மதி ஆசிரமத்தில் சாதி, மதம் முதலிய வேற்றுமை பாராட்டக் கூடாது என்று காந்தி எடுத்துச் சொன்னார்.

'தூதாபாய்' என்ற அரிசனக் குடும்பத்தை ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார்.

காந்தியின் இந்தச் செயலை ஆதரிக்காத பணக்கார இந்துக்கள் அவருடைய ஆசிரமத்திற்கு உதவி வந்ததை நிறுத்திக் கொண்டனர். இதனால் ஆசிரமத்திற்குப் பண நெருக்கடி ஏற்பட்டது.

ஆசிரமத்தின் பொருளாளர் காந்தியிடம் வந்து, "கையிலுள்ள பணம் இந்த மாதத்திற்குத்தான் வரும்" என்று தெரிவித்தார். காந்திஜிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. எக்கஷ்டம் வந்தாலும் 'தூதாபாய்' குடும்பத்தை ஆசிரமத்திலிருந்து வெளியேற்றுவதில்லை என உறுதி பூண்டார்.

ஒரு நாள் உள்ளே உட்கார்ந்திருந்த காந்தியிடம் ஆசிரமத்துக் குழந்தை ஒன்று ஓடி வந்து, "பாபுஜி உங்களைத் தேடிக் கொண்டு ஒருவர் மோட்டார் வண்டியில் வந்திருக்கிறார்" என்று சொல்லி காந்தியை வெளியில் அழைத்து வந்தது.

விலை உயர்ந்த பட்டாடை அணிந்த செல்வந்தர் ஒருவர், "உங்கள் ஆசிரமத்துக்கு உதவியாக இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி 13000 ரூபாயைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். அவர் பெயர், விலாசம் என எந்த விவரமும் தராமல் போய்விட்டார். காந்திஜிக்கும் அவரைத் தெரியாது.

இந்த எதிர்பாராத உதவி காந்தியின் வாழ்க்கையில் கடவுள் துணையிருக்கிறார் என்ற நம்பிக்கையை அவருக்கு மேலும் ஊட்டியது.

சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்கள் என ஒரு வகுப்பைத் தனியாகப் பிரித்து வைப்பது மாபெரும் பாவமாகும். மனித குலம் ஒன்றே என்ற உணர்வே வேண்டத்தக்கதாகும் என்று காந்தி கூறினார்.

— சு. கண்ணகி, மிட்டூர்



அக்னிக்

7. ஒரு கடத்தல் கதை

மாறன் திடீரென்று தளர்ந்து சரிந்து சோபாவில் சாய்ந்ததும், தாய் பதறிப் போய் "மாறா மாறா" என்று அவனருகே வந்தாள்.

"நடேசனுக்கு ஏதாவது ஆபத்தா?" என்று மாறன் கேட்டது அவன் தந்தைக்குத் தெரியும். ஆனால் என்ன பதில் வந்தது என்பது தெரியாது. வந்த பதில் தந்த அதிர்ச்சியில்தான் அவன் நிற்க முடியாமல் உட்கார்ந்துவிட்டான் என்பது அவருக்குப் புரிந்தது. உடனே மகன் கையிலிருந்த ரிசீவரை வாங்கி காதில் பொருத்தி "ஹலோ! நான் நெடுமாறனின் அப்பா பேசறேன். நடேசனுக்கு என்ன? ஏதாவது விபத்தில் மாட்டிக் கொண்டானா?" என்று கேட்டார்.

மறு முனையிலிருந்தவர், "ஐயையோ, அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறான்னு சொல்ல வந்தேன். நடேசன் என் பக்கத்திலே நிற்கிறான். நீங்களே பேசுங்கள். தம்பீ, பேசுப்பா!" என்றதும் போனில் நடேசன் குரல் ஒலித்தது. "நான் நடேசன் பேசறேன்" என்றது.

"நான் மாறனோட அப்பா பேசறேன். தம்பி உனக்கொன்னும் இல்லையே..."

"இல்லைங்க. இப்போதைக்கு நான் நல்லாதான் இருக்கறேன். மதுரவாயில் முடியற இடத்திலே இருக்கிற எஸ்.டி.டி. பூத்திலிருந்து பேசறேன். ஆனா ஆபத்தான சூழ்நிலையிலே இருக்கறேன். என்னை யாரோ கடத்த நினைக்கறாங்க. இங்கிருந்து தனியே வர பயமாயிருக்கு. என்னிடம் காசே இல்லை... என்னைக் காப்பாத்துங்க. ப்ளீஸ்..."

நடேசன் குரல் கெஞ்சியது.

"நிச்சயமா காப்பாத்துறோம். மாறனிடம் பேசு" என்று கூறிய மாறன் தந்தை, ரிசீவரை மாறனிடம் கொடுத்தார். அதற்குள் எழுந்து நின்று கொண்ட மாறன், "நடேசா! நடேசா! நீ நல்லா இருக்கிறியா?" என்று கேட்டான்.

"நல்லா இருக்கறேன். நான் இருக்கிற இடத்துக்கு வந்து என்னை அழைச்சிட்டுப் போறியா?" நடேசன் கேட்டான்.

"கண்டிப்பா வரேன்" என்று சொன்ன மாறன், அப்பாவிடம் நடேசனின் வேண்டுகோளைக் கூறினான்.

மாறனிடமிருந்து ரிசீவரை வாங்கிக் கொண்ட அவன் தந்தை, "நடேசா, நீ இப்ப இருக்கிற அதே போன் பூத்திலேயே இரு. இப்ப போனை பூத் உரிமையாளரிடம் கொடு." என்றார். ரிசீவர் கை மாறியதும், உரிமையாளரிடம், அந்த பூத் எங்கே இருக்கிறது என்பதைச் சரியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பிறகு "ஐயா, நாங்க



குஞ்சுகள்!

உடனே வர்றோம். நாங்க வர்றவரையில் நடேசனைப் பத்திரமா பார்த்துக்கோங்கோ'' என்று கூறினார்.

மறுநொடி, ''மாறா நீயும்வா. நாம் போய் நடேசனை அழைத்து வருவோம்.'' என்றார் தந்தை.

மாறன் புறப்பட்டன்.

தந்தை காரை எடுத்தார். மாறன் அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

கார் மதுரவாயில் நோக்கிச் சென்றது.

சாலையில் போக்குவரத்து குறைந்து விட்ட நேரம், அதனால் கார் பாதுகாப்பான வேகத்துடன் சென்றது. மதுரவாயில் முடியும் பகுதியில் எஸ்.டி.டி. பூத் இருந்தது. கார் அதை ஒட்டி நின்றது.

மாறனும் அவன் அப்பாவும் இறங்கி பூத்தின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்கள். அதன் உரிமையாளர், ''நீங்க நெடுமாறன்தானே..?'' என்று கேட்டபோது, மாறன், ''ஆமாம். இவர் எங்கப்பா'' என்று பதிலளித்தான். அப்போது அந்தக் கடையின் ஒரு மூலையில், வேட்டை நாய்க்குப் பயந்து ஒரு புதரில் மறைந்து நடுங்கும் முயல்குட்டியைப் போல உட்கார்ந்திருந்த நடேசன் மெதுவாக எழுந்தான். ''மாறா'' என்றழைத்தபடி அவனை நெருங்கி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். பீறிட்டுக்

டாக்டர் பூவண்ணன்

கிளம்பும் அழுகையைச் சமாளிக்க முடியாமல் தேம்பினான்.

மாறனின் தந்தைதான் அவன் முதுகைத் தடவிக் கொடுத்தபடி, "நடேசா, பயப்படாதே. நாங்கதான் வந்துட்டமே. இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது" என்றார்.

"தாங்க்யூ சார்... தாங்க்யூ!"

அவனால் அழுகை கலந்துதான் நன்றி தெரிவிக்க முடிந்தது.

"நடேசா, என் போன் நம்பர் உனக்கெப்படி தெரிந்தது?"

"எனக்குத் தெரியாது. மனோ நம்பர்தான் தெரியும். கையில் காசில்லே. காசில்லாம போன் செய்ய அனுமதிக்க முடியாதுன்னு இந்தக் கடைக்காரர் சொல்லிட்டார். அப்போதுதான் உன் புத்தக வங்கி எனக்குக் கை கொடுத்தது. இங்கே பார்."

நடேசன் சுட்டிக் காட்டிய இடத்தில் சுவரில் ஒரு செய்தித்தாள் வெட்டி ஒட்டப்பட்டிருந்தது.

'மூவேந்தர் தமிழ்ச் சங்கத்தின் புத்தக வங்கி மாணவருக்கு உதவும் மாணவர் அமைப்பு' என்னும் தலைப்புடன் இளங்கோவன் தந்தை தமது செய்தித் தாளில் மூன்று காலத்தில் வெளியிட்ட செய்தி ஒட்டப்பட்டிருந்தது.

"இந்தப் பகுதியில் ஏழை மாணவர்கள் அதிகம். அவர்கள் படித்துப் பயனடையட்டும்னு இப்படி ஒட்டியிருக்கேன்" என்றார் கடைக்காரர்.

செய்தியில் நெடுமாறன் முகவரியும் தொலைபேசியும் சிவப்பு மையால் அடிக்கோடிடப்பட்டிருந்தன.

நடேசன் அதை விரலால் தொட்டுக் காட்டி "இதிலிருந்துதான் உன் போன் நம்பர் கிடைச்சது. இதை பூத்காரரிடம் காட்டி, நெடுமாறன் என் நண்பன். அவனுக்குத்தான் போன் பண்ணனும்னு சொன்னதும் என் மதிப்பு உயர்ந்துவிட்டது. மூவேந்தர் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவனா, நீ! முதலிலேயே இதைச் சொல்லிருக்கக் கூடாதா? போன் செய்துக்க என்று அனுமதிச்சார். எனக்கிருந்த பயத்தில் போன் நம்பரை ஒழுங்கா தட்ட முடியாமல் விரல்கள் நடுங்கின. அதுதான் அவரே போன் செய்துட்டார்." என்றான்.

மாறனின் தந்தை வாட்சைப் பார்த்து விட்டு, "நேரமாகுது புறப்படுவோம்" என்று கூறவும், பூத்காரருக்கு அவரும் மாறனும் நடேசனும் நன்றி தெரிவித்து விட்டு வெளியே வந்தார்கள்.

"நடேசா, என்ன நடந்தது? உன்னைக் கடத்த நினைச்சவங்க யார்? ஏன் உன்னைக் கடத்த நினைச்சாங்க?"

நெடுமாறன் கேட்டான்.


நடேசன் அன்று மாலை நடந்ததை நினைவுபடுத்தி குரலில் பயத்தோடு, பதட்டத்தோடு சொல்லலானான். அவன் சொன்ன செய்தி இதுதான் :

அன்று மாலை.

மனோகரன், நடேசனிடம் விடை பெற்று அய்யாவு காலனிக்குத் திரும்பினான். நடேசன் தன் புத்தகப் பை தோளில் ஊசலாட மெல்ல நடந்தான்.

அவன் என்.எஸ்.கே. நகரை அடைந்த போது, ஒரு வெள்ளை அம்பாசிடர் காரை, ஒருவர் மட்டும் தள்ள முயன்று கொண்டிருப்பதைக் கண்டான்.

நடேசன் அந்த




காரரை அடைந்தபோது, தள்ளிக் கொண்டிருந்த ஆசாமி நிமிர்ந்து, ''தம்பி, கார் ஸ்டார்ட் ஆகலே. என் ஒருத்தனாலே தள்ள முடியலே. கொஞ்சம் உதவி செய்யேன். நீயும் என்னோடு தள்ளினா, கார் உடனே ஸ்டார்ட் ஆயிடும்'' என்றான்.

நடேசன் ஒரு வினாடி கூடத் தயங்கவில்லை. காரைத் தள்ளிய ஆசாமிக்கு அருகே நின்று, இரண்டு கைகளையும் கார் மேலே பதித்துத் தள்ளினான். அந்த ஆசாமியும் தள்ளினான்.

சில அடி தூரம் நகர்ந்ததும் கார் ஸ்டார்ட் ஆனது. ''தம்பி, ரொம்ப தாங்க்ஸ்'' என்ற அந்த ஆசாமி ''காரில் ஏறு தம்பி, உன்னை உன் வீட்டில் விட்டுட்டுப் போறோம்'' என்றான்.

நடேசன் ''வேண்டாங்க. என் வீடு அருகேதான் இருக்கு. நடந்தே போயிடறேன்'' என்று ஓடி எடுத்து வைத்தான்.

''பரவாயில்லே... அந்தக் கொஞ்ச தூரம் காரிலே போகலாமே'' என்றபடி ஒரு கையால் காரின் பின் கதவைத் திறந்து, மறு கையால் நடேசனின் கையைப் பிடித்தான். கெட்டியான பிடி! கையே வலிக்கும்பிடி. அதனால் திகைத்துப்போன நடேசன், அந்தப் பிடியிலிருந்து விடுபடத் திமிறியபோது, அவனைப் பிடித்திருந்த ஆசாமி முகத்தில் ஒரு துணியை வைத்து அழுத்த நடேசன் மயக்கத்துடன் காருக்குள் ஏற்றப்பட்டான். உடனே கார் புறப்பட்டது.



நடேசன் உடல் அசையவில்லை. எழவில்லை. எதிர்ப்புக் காட்டவில்லை.

அவன், ''துரை, பையன் மயக்கமாயிட்டான். வேகமா போ!'' என்று சொன்னான்.

காரரோட்டி திரும்பிப் பார்த்து, திருப்தி அடைந்து, ஆக்ஸிலேட்டரை அழுத்தினான். கார் பறந்தது.

அரும்பாக்கம் தாண்டி, மதுரவாயிலில் நுழைந்து



"இன்னிக்கு எங்க வீட்டுல அடுப்பு எரியுதுன்னா அதுக்கு இவர்தான் காரணம்."

"பெரிய வள்ளலா?"

"இல்லை. கியாஸ் கம்பெனி ஓனர்!"

- வினோத், விருத்தாச்சலம்

ரேஸ் கார் வேகத்தில் பறந்த அம்பாஸிடர், திடீரென்று வேகம் குறைந்து, மெல்ல நகர்ந்து பின் அந்த நகர்வும் இல்லாமல் நின்றது.

பின் சீட்டுக்காரன், "துரை, என்ன ஆச்சு, ஏன் வண்டி நின்னுடுச்சு?" என்று கேட்டான்.

"தெரியலையே!" என்று கூறிக் குழப்பமடைந்த துரை, கியரை மாற்றி, ஸ்விட்சை ஆஃப் செய்து, மீண்டும் ஆன் செய்து, ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

கார் கனைத்ததே தவிர, நகரவில்லை.

அப்போதுதான் துரை, பெட்ரோல் அளவைக் காட்டும் முள்ளைப் பார்த்தான்.

"அடடே! பெட்ரோல் தீர்ந்து போச்சு! காலையிலே பெட்ரோல் போடணும்னு ஐயாவிடம் பணம் வாங்கினேன். போட மறந்துட்டேன்" என்றான் துரை.

"நாசமாப் போச்சு. போ, போ! சீக்கிரம் இறங்கிப் போய் பெட்ரோல் வாங்கிட்டு வா. டிக்கிலே கேன் இருக்கா? அதுவும் இல்லையா?"

"இருக்குது" என்ற துரை காரிலிருந்து இறங்கினான். "சோமு சார், கொஞ்சம் இறங்கி ஒரு கை கொடுங்க. காரை ஓரமா நிறுத்திக்குவோம்" என்றான் துரை.

"இது வேறயா?" என்று அலுத்துக் கொண்டே துரை காரிலிருந்து இறங்கினான். அவன் பின்னே நின்று தள்ள, துரை ஸ்டியரிங்கை ஒரு கையால் அசைத்தபடி, மறு கையால் காரைத் தள்ள, ஒருவாறு கார் ஓரங்கட்டப்பட்டது.

துரை டிக்கியைத் திறந்து, கேனை எடுத்துக் கொண்டான். "கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் நடக்கணும். ஏதாவது ஸ்கூட்டரோ, காரோ லிஃப்ட் கொடுத்தா சீக்கிரம் வந்துடறேன். நீங்க இங்கேயே இருங்க" என்று கூறினான். உடனே, சாலையின் மறுபுறம் சென்று வந்த வழியே நடந்தான். சோமுவின் பார்வையிலிருந்து மறையும் வரை அவனுக்கு யாரும் லிஃப்ட் கொடுக்கவில்லை.

சோமு காருக்குள் பார்த்தான்.

நடேசன் சீட்டில் படுத்துக் கிடந்தான்.

மேலும், சில நிமிடங்கள் சென்றன.

சோமுவுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டு. நிலை கொள்ளாமல் தவித்தபடி நின்றவனுக்கு ஒரு சிகரெட் பிடித்தால் தேவலாம் போலிருந்தது.

சோமு இருபுறமும் நோக்கினான். கிழக்கே கடை தென்படவில்லை. மேற்கே நோக்கினான். சிறிது தூரத்தில் ஒரு பெட்டிக் கடை தெரிந்தது.

சோமு, காரில் படுத்திருக்கும் நடேசனைப் பார்த்து விட்டு, பெட்டிக் கடையை நோக்கி நடந்தான். சிறிது தூரம் சென்ற பின், நின்று திரும்பிப் பார்த்தான். திருப்தியடைந்தவன் போல் மேலும் நடந்தான்.

பெட்டிக் கடையில் சிகரெட் வாங்கினான். திரும்பி காரை நோக்கி அவசரப்படாமல் நிதானமாக நடந்தான்.

காரை நெருங்கி, அதன் முன்புறம் சாய்ந்து நிற்க விரும்பிய சோமுவின் பார்வை காருக்குள் சென்றதும் பதறிப் போனான்.

காரணம்.

பின் சீட்டில் நடேசன் இல்லை.

முன் சீட்டிலும் இல்லை. சாலையின் இரு புறமும் பார்த்தான். வாகனங்கள் சென்றனவே தவிர ஆட்கள் இல்லை. ஏதோ நினைத்தவனாய், திடீரென்று காரின் கீழே குனிந்து பார்த்தான். அங்கேயும் இல்லை. எதிர்புறத்தில் ஒரு பெரிய பூவரசம் மரம் இருந்தது. அதை நோக்கி ஓடினான். அதன் பின்புறம் நடேசன் மறைந்திருக்கிறானா என்று மரத்தைச் சுற்றிப் பார்த்தான்.

நடேசன் இல்லை.

அவன் மாயமாக மறைந்துவிட்டான்.

(தொடரும்)

மலர்களின் மாநாடு!


மலர்களெல்லாம் கூடியொரு
மாநாடு போட்டதாம்!
தலைமையினை நாடியொரு
தாமரைப்பூ ஏற்றதாம்!


முல்லைப்பூவும் மனமுவந்து
முன்னிலையை வகித்ததாம்!
மல்லிகைப்பூ வரவேற்பு
மடலைவாசித் தளித்ததாம்!


சிறப்புரையைச் சிவப்பு ரோஜா
சிறப்புடனே எடுத்ததாம்!
திருத்தமுடன் செண்பகமோர்
தீர்மானத்தைத் தொடுத்ததாம்!

மணத்துடனே பூக்கள்கூடி
மாலையாதல் பார்த்துமே
இனத்துடனே மாந்தர்கூடி
இனிதுவாழக் கேட்டதாம்!

செந்தாழையும் நன்றிகூறச்
சீராயந்தி படர்ந்ததாம்!
மந்தாரையின் நாட்டு வாழ்த்தில்
மாநாடன்று முடிந்ததாம்!








தளவை இளங்குமரன்

சூரியனே...

சூரியன் என்ற நட்சத்திரம், மற்ற நட்சத்திரங்களைவிட நம் அருகில் உள்ளதால், பெரியதாகவும், பிரகாசமாகவும், வெப்பமாகவும் உள்ளது. இரவில் நாம் காணும் மற்ற நட்சத்திரங்கள், சூரியனைவிட பல ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளதால், அவை சிறிதாகத் தெரிவதுடன், அவற்றின் வெளிச்சம் நம்மை வந்தடைய பல ஆண்டுகள் ஆகின்றன. ஜெட் விமானத்தில் நீங்கள் பறந்தால், சூரியனை அடைய 15 வருடங்கள் ஆகும். சூரியனும் மற்ற நட்சத்திரங்களும் விண்வெளியில் அவற்றின் நிறை அடர்த்தியால், தன்னைத்தானே சுற்றிக்கொண்டு அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன.


சூரியனை 5 பகுதிகளாகப் பிரிக்கலாம். சூரியனின் மையப் பகுதியில்தான் சூரியனின் மொத்த சக்தியும் உள்ளது. இப் பகுதியின் பெயர் மைய 'ஒளிக்கோசம்! இப் பகுதியில் தொடர்ந்து அணுப்பிணைவு நிகழ்வதால், இதன் வெப்பநிலை 1.4 கோடி செல்சியஸாக உள்ளது. இரண்டாவது அடுக்கான சூரியனின் வளி மண்டலத்தில், அடர்ந்த வாயுக்கள் பளபளவென பிரிந்து மின்னிக் கொண்டிருக்கின்றன. இவை காமாக்கதிர்களால் உடைபட்டுக் கொண்டிருக்கின்றன. சூரியனின் மூன்றாவது அடுக்குத்தான் வெளிச்சத்தை உமிழும் ஒளி மண்டலம். நான்காவது அடுக்கு நிறமி மண்டலம். இது சிவப்பாகத் தெரிவதால், இதற்கு 'செவ்வொளி வட்டம்' என்ற பெயரும் உண்டு. இப்பகுதி முழுவதும் பல்வேறு கனிமங்கள் வாயு நிலையில் உள்ளன. இதன் வெப்பநிலை 6000°C ஐந்தாவது அடுக்கு 'ஒளி வட்டம்' எனப்படும் வளையம் ஆகும். முழு சூரிய கிரகணத்தின்போது, சூரியனைச் சுற்றி கிரீடம் போல் பிரகாசமாகத் தெரியும் ஒளிவளையம் இதுதான். இதன் விட்டம் 5, 76,00,000 கி.மீ. இது புதன் கிரகத்தின் அளவாகும். ஒளி வளையத்தின் வெப்பநிலை. சுமார் 20,00,000 கெல்வின். இப்படி உயர்ந்த



சூரிய கிரகணத்தின் போது...

வெப்ப நிலைக்குக் காரணம். ஒளிக்கோசம் மற்றும் செவ்வொளி வட்டத்தில் காணப்படும் வெப்பசலன இயக்கமே!

• சூரியனின் விட்டம் 14,00,000 கி.மீ (பூமியைப் போல் 109 மடங்கு)



சூரியனே...

• சூரியன், தான் வலம் வரும் வெள்ளி வீதியை வினாடிக்கு 250 கி.மீ வேகத்தில் சுற்றி வருகிறது.

• சூரியன் தன் மைய அச்சில் ஒருமுறை சுழல, துருவப் பகுதியில் 24லிருந்து 25 நாட்கள் ஆகின்றன. (மையப்பகுதி அதிக நிறை அடர்த்தி உடையது)

• சூரியன் பூமியிலிருந்து 15 கோடி கி.மீ தொலைவில் உள்ளது.

• சூரியனும்கூட தன் அச்சில் 5 பாகை சாய்ந்துள்ளது.

• சூரியன் மையப்பகுதியிலிருந்து, அதன் புறப்பரப்புக்கு ஒளியும், வெப்பமும் வந்து சேர 5 கோடி ஆண்டுகள் ஆகின்றன.

• சூரியனில் ஒவ்வொரு வினாடியும், 60 கோடி டன் ஹைட்ரஜன் அணுக்கள் அணு உலைக்காக – சக்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

• சூரியனிடமிருந்து, ஒளி பூமியை வந்தடைய 8 நிமிடங்கள் ஆகின்றன.

• சூரியனிடமிருந்து வரும் ஒளிக்கதிர்கள் பரவுதலில் 1/1,000,000 பகுதி மட்டுமே, பூமியை வந்தடைகிறது. மற்றவை வான்வெளியில் சிதறடிக்கப்படுகின்றன.

• நமது வெள்ளிவீதியின் விட்டம் 1,00,000 ஒளி ஆண்டுகள் ஆகும்.

• நமது அண்டத்தின் (galaxy) வயது 12,000லிருந்து 14,000 கோடி ஆண்டுகள்.

• நமது அண்டத்தில் சுமார் 10,000 கோடி விண்மீன்கள் உள்ளன.

• வெள்ளி வீதியின் மையப்பகுதி தன் அச்சை ஒருமுறை சுற்ற 50,000 ஆண்டுகள் ஆகின்றன.

• சூரியன் வெள்ளி வீதியின் மையத்தை ஒருமுறை சுற்ற 22.5 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இதனையே 'காஸ்மிக் ஆண்டு' என்கின்றனர்.

- ஸ்வாதி

நிருகன் என்ற அரசனுக்குக் குழந்தைச் செல்வம் இல்லை. அவன் செய்யாத தான தர்மம் கிடையாது. தரிசிக்காத ஆலயம் இல்லை.

ஒருநாள் அவனது அரண்மனைக்குப் பரத்வாஜ முனிவர் வந்தார். அரசன் தனக்கு வாரிசு இல்லாததைக் கூறி வருந்தினான். முனிவர் கண்மூடி தியானித்தார்.

பிறகு "மன்னா! கார்த்திகை மாதம் முழுவதும் தினமும் முதல்முறை கன்று ஈன்ற ஆயிரம் பசுக்களைத் தகுந்த அந்தணர்களுக்குத் தானம் கொடுங்கள். தானங்களில் சிறந்தது கோதானம். அதனால் ராஜ்யத்துக்கு வாரிசு கிடைக்கும்" என்று கூறிச் சென்றார்.


கார்த்திகை மாதம் வந்தது. நிருகன், முனிவர் சொன்னபடி கோதானம் செய்தான். நல்ல அந்தணர்களைத் தேடித் தேடி மந்திரிகள் அலைந்தனர்.

ஜைமினி மாபெரும் தவசீலர். பேராசையற்றவர். அவரை வேண்டி மந்திரிகள் அழைத்து வந்தனர். அவர் ஒரு காராம் பசுவைத் தானமாகப் பெற்றுச் சென்றார்.

ஜைமினி அதை ஆசிரமத்துக்கு ஓட்டிச் செல்லும் வழியில் எதிரே கோயில் யானையைக் குளிப்பாட்டி அழைத்து வந்தனர். மாடு அதைக் கண்டு மிரண்டு ஓடியது. ஜைமினியும் அதைப் பின் தொடர்ந்து வெகு தூரம் ஓடிக் களைத்தார். ஜைமினிக்குத் தன்னை அலைய வைத்த பசுவின் மீது கோபம் வந்தது.

"நீ யாருக்குச் சொந்தமாவாயோ அவர் புத்திரனைப் பிரிந்து வாடட்டும்" என்று மாட்டைச் சபித்தார்.

இருட்டியதும் மாடு மறுபடி அரண்மனைக் கொட்டடிக்கே வந்தது. அங்கு மறுநாள் தானம் கொடுக்க, அதற்கடுத்த நாளைக்கு என்று ஆயிரக்கணக்கான பசுக்கள் தங்கள்



கன்றுகளோடு நின்றிருந்தன. அவற்றுடன் திரும்பி, வந்த காராம்பசுவும் சேர்ந்துகொண்டது. இவ்வாறு அந்தப் பசு திரும்பி வந்ததை காவலர்கள் கவனிக்கவில்லை.

சாபம் பெற்ற நிருகன்!

ஆர். பொன்னம்மாள்

மறுநாள் அந்தப் பசு சோம சர்மா என்ற அந்தணருக்குத் தானமாக வழங்கப்பட்டது. அவர் அதைத் தன் இல்லத்துக்கு ஓட்டிச் சென்றார்.

எதிரே வந்த ஜைமினி, பசுவை அடையாளம் கண்டு கொண்டார். சோம சர்மாவிடம், ''அது மன்னரால் நேற்று எனக்குத் தானமாக வழங்கப்பட்ட பசு'' என்றார்.

சோம சர்மா ''இல்லை, இதை நான் இப்போதுதான் அரசரிடமிருந்து தானமாகப் பெற்று வருகிறேன்'' என்றார்.

''வாருங்கள். அரசரிடம் போய் நீதி கேட்போம். ஒரே பசுவை இருவருக்குத் தானம் கொடுப்பது குற்றமல்லவா?''


என்று வாதிட்டார் ஜைமினி.

சோமசர்மா அவர் பேச்சை ஏற்று அரசவைக்குத் திரும்பினார். அரசனிடம் தங்கள் பிரச்னையைக் கூறினர்.

நடந்த செயலுக்கு நிருக ராஜன் வருந்தினான்.

''பிராமணோத்தமர்களே! தவறு நடந்து விட்டது. பெரிய மனது பண்ணி மன்னியுங்கள். முனிவரே! இதை விட இளையதான காராம் பசுவை ஒன்றுக்கு இரண்டாக வாங்கிக் கொண்டு என்னை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று பணிவோடு வேண்டினான்.

''மன்னவா! தானம் கொடுக்கும் இடத்தில் காவல் கெட்டியாக இருந்தால் இந்தத் தவறு நடந்திருக்காது. நிர்வாகத் திறன் சரி



யில்லை! தேவைக்கே ஆசைப்படாத எனக்கு இரண்டு பசுக்கள் எதற்கு? தவிர இந்த மாட்டுக்கு நான் ஒரு சாபம் கொடுத்து விட்டேன். இதன் உரிமையாளன் புத்திரனைப் பிரிந்து தவிப்பானென்று'' என்று கூறிச் சென்றார்.

சோமசர்மா உடனே பதற்றத்துடன், "அப்படியா! எனக்கு இந்தப் பசு வேண்டாம்'' என்று கூறி விட்டுப் போய் விட்டார்.

அரசன் காட்டிற்குப் போய் கோதானம் செய்யச் சொன்ன முனிவரிடம் நடந்தது நடந்தபடி கூறினான்.

அவர் "ஒரே பொருளை இருமுறை தானம் செய்வது பாவம். இந்தச் சாபத்தினால் உனக்குக் கட்டாயம் பிள்ளை பிறக்கும். அப்போதுதானே அவனை நீ பிரிய முடியும்!'' என்றார்.

"இந்தச் சாபத்துக்கு விமோசனமே கிடையாதா?'' என்று பரிதாபமாகக் கேட்டான் நிருகன்.

"கோவினால் ஏற்பட்ட சாபத்தை கோ-விந்தன் வந்து தீர்ப்பான்'' என்று ஆசிர்வதித்தார் முனிவர்.

அடுத்த ஆண்டு நிருகனுக்கு மகன் பிறந்தான். மகனை எடுத்துக்கொண்டு புண்ணியம் சேர்க்க தீர்த்த யாத்திரை புறப்பட்டார்கள் அரசனும், அரசியும்.

பிரபாச சமுத்திரம் சென்று நீராடி துவாரகை வந்தனர். தாகமாயிருக்கிறதென்று ஒரு குளத்தில் நீர் குடிக்க இறங்கிய நிருகன், கால்கள் வழுக்கி குளத்தில் விழுந்தான். விழுந்தவன் ஆமையாக மாறி கலவரத்துடன் நின்ற மனைவியிடம், "இது ஜைமினியின் சாபம். நீ அரண்மனை சென்று மகனைக் காத்துவா. கோ-பாலன் வந்து சாபம் தீர்ப்பார்'' என்றான்.

ராணி மகனுடன் ராஜ்யத்துக்குத் திரும்பினாள். ஆண்டுகள் கடந்தன. நிருகன் மகன் வாலிபனாகி அரசுப் பொறுப்பேற்றான். துவாரகையில் யாதவர்கள் கண்களில் நிருக ஆமை பட்டது. "அடேயப்பா! எத்தனை பெரிய ஆமை!'' என்று ஆச்சரியப் பட்டு பிடிக்க முயற்சித்தனர். அவர்களால் முடியவில்லை!

கிருஷ்ணரிடம் சென்று ஆமையைப் பிடித்துத் தரும்படி கெஞ்சினர். கிருஷ்ணர் வந்து ஆமையைத் தொட்டதும் நிருகன் சாப நிவர்த்தி பெற்றான். கிருஷ்ணரை வலம் வந்து நமஸ்கரித்து தனது வரலாற்றைக் கூறி நாடு திரும்பி மகிழ்ச்சியோடு வாழ்ந்தான்.

துவாரகைக்கு அருகில் நிருகன் ஆமையாக வாழ்ந்தகுளம் 'சுக்லாஸ்' என்ற பெயரில் புனித தீர்த்தமாகப் புகழ் பெற்று விளங்குகிறது.

வானிலைச் செய்திகள்




உலகில் ஒரு நாளில் அதிகபட்ச வெப்பம் லிபியா பாலைவனத்தில் உள்ள 'அல் அஜுசியா' என்ற இடத்தில்தான் பதிவாகியுள்ளது. மிக அதிக அளவாக 57.8 செல்சியஸ் (136° பாரன்ஹீட்) 13.9.1922ம் நாள் பதிவாகியது. ஒரு முட்டையை பாறையில் வைத்து பொறிப்பதற்கு ஏற்ற வெப்பம் கொண்டது இந்த அதிக அளவு வெப்பநிலை.

உலகில் ஒரு நாளில் மிக அதிக அளவாக ஏற்பட்ட 'மழைப் பொழிவு' 15.03.1952ம் நாள் பொழிந்தது. இந்தியப் பெருங்கடலில் உள்ள 'லா ரியூனியன்' என்ற தீவில் பெய்த இம் மழைப் பொழிவு 190 செ.மீ (74 அங்குலம்') இருந்தது.

உலகில் ஒரு நாளில் மிக அதிக அளவாக ஏற்பட்ட 'பனிப் பொழிவு' 7.2.1963ம் நாள் அமெரிக்காவில் உள்ள 'அலாஸ்கா' கேம்ப்பில் ஏற்பட்டது. அந்த நாளில் பனிப்பொழிவு 198 செ.மீ (78 அங்குலம்) ஏற்பட்டுப் பதிவானது.

உலகில் 14.7.1953ம் நாள் மிகப் பெரிய ஆலங்கட்டி மழைப் பொழிவு கனடா நாட்டின் 'அல்பர்ட்டா' என்ற இடத்தில் நிகழ்ந்தது. சூறாவளிக் காற்றும் வீசிய இப்பொழிவில், ஒவ்வொரு கட்டியும் கோல்ஃப் பந்து அளவில் இருந்தது. இப்பொழிவினால் ஏறக்குறைய 36000 வாத்துகள் மடிந்தன

— கே. சங்கரகிருஷ்ணன்



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.

விடுகதைப் பக்கம்

I 1. அகன்ற வாய் அரசன் ஆடிக் கொண்டே இருப்பான். அவனுக்குள்ளே கறுப்பர் கோடி அரைபட்டுச் சாறாய் வடிவர் - அவை என்ன?

2. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம், தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது - அது என்ன?

3. அரிசி போல பூ பூக்கும். அம்மாடி எனக் காய் காய்க்கும் - அது என்ன?

4. அடிமேல் அடிபட்டும் அசராத சின்னப்பையன் குறி வைத்த இடம் பார்த்துத் தப்பாமல் சேருவான் - அவன் யார்?

5. அம்பியின் கீழே கும்மியடிப்போம், கப்பல் ஏறிக் கூத்துப் பார்ப்போம், பட்டுப் புடவைக்குப் பொத்தல் போடுவோம் - நாங்கள் யார்?

6. அண்ணன் தம்பி சேராவிட்டால் ஊருக்கெல்லாம் கொண்டாட்டம்- அது என்ன?

- எம். வினோத், சாத்தூர்.

II 1. வளரும்போது கறுப்பு; வயதான போது வெள்ளை - அது என்ன?

2. வெளியில் போனால் உடன் வருவான் வீட்டுக்கு வந்தால் வெளியில் இருப்பான் - அவன் யார்?

3. கடையும்போது திரளுவான்; காய்ச்சும்போது உருகுவான் - அது என்ன?

4. உழைப்பில் மலரும்பூ உடனடி உலரும் பூ - அது என்ன?

5. காக்கைப் போல் கறுப்பு; வாயால் மென்றால் நீலம் - அது என்ன?

6. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல் - அது என்ன?

- தி.சே. அறிவழகன், உத்திரமேரூர்.

III 1. மஞ்சள் பட்டுடுத்தி, மடிக்குள் பிள்ளை வைத்து கடைத் தெருவில் வீற்றிருப்பாள், கண்டவர் எச்சில் ஊறும், ராணியம்மா - அவள் யார்?

2. தவழும்போது ஒரு பெயர், விழும்போது ஒரு பெயர், உருளும்போது ஒரு பெயர் - அது என்ன?

3. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும் – அது என்ன?

- க. பூங்கொடி, சித்தோடு

IV 1. பச்சை நிறக் கிளிதான் நானும் - ஆனால் சோதிடம் பார்க்கத் தெரியாது - நான் யார்?

2. கையைத் தூக்கினால் ஓடுவேன்; இல்லையென்றால் நிற்பேன் - நான் யார்?

3. தண்ணீரில் துள்ளாட்டம் தரையிலே தள்ளாட்டம் - அது என்ன?

4. வளர வளர வெட்டுவார்கள் தலைமுடி அல்ல; வெட்ட வெட்ட வளருவேன் வாழையும் அல்ல - நான் யார்?

- சீர்காழி வி. ரேவதி, தென்பாதி

III விடை : 1. மாம்பழம், 2. மேகம், மழை, ஆறு, 3. கடிகாரம்


IV 1. வெட்டுக்கிளி 2. ரயில் 3. மீன் 4. நகம்



விடைகள் :

I 1. என் - செக்கு
2. படி - உழக்கு
3. மிளகாய்
4. கடிதம்
5. எலிகள்
6. தண்டவாளம்

II 1. முடி
2. செருப்பு
3. வெண்ணெய்
4. வியர்வை
5. நாவல்பழம்
6. கிளி





இடமிருந்து வலம்

1. பாம்பாட்டி ஊதுவது (3)

4. ________ தன் வாயால் கெடும் என்பது பழமொழி (3)

6. ரிக் என்பது ________ (3)

9. நாடு என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

10. பாலைவனத் தாவரம் (3)

14. ஜார்ஜ் புஷ் இந்த நாட்டின் அதிபர் (5)

வலமிருந்து இடம்

2. சமீபத்தில் விம்பிள்டன் டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் போட்டியில் வெற்றி பெற்ற ஒருவரின் முதல் பாதி பெயர் (5)

5. ஆடு, மாடு ________ போடும் பிராணிகள் (2)

8. ரௌத்திரம் (3)

11. இதிலிருந்து செடி முளைக்கும் (2)

12. நமது தேசிய மலர் (3)

16. ________, சக்கர, பீதாம்பரத்துடன் காட்சி தருவார் கிருஷ்ணர் (3)

மேலிருந்து கீழ்

1. உரலுக்கு ஒரு பக்கம் இடி; இதுக்கு இரண்டு பக்கமும் இடி (5)

13. தவறு என்பதற்கு எதிர்ச்சொல் (2)

கீழிருந்து மேல்

3. ________ மயிலுக்குத் தோகை உண்டு (2)

5. சந்திரனைப் பார்த்து மலரும் பூ (3)

7. மேஜை, நாற்காலி, கதவு போன்ற மரவேலை செய்பவர் (4)

14. அப்பாவின் தங்கை (3)

15. இரவில் ________ சூழ்ந்திருக்கும் (4)

16. புறா இதன் சின்னம் (5)

— எஸ். ப்ரியா,
பெரம்பூர்


விடை 64 ஆம் பக்கம்

யோகாசனம் ஆகிய வற்றில் ஒன்றை மேற்கொள்ளலாம். இரவில் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும்.

● எஸ். துர்கபிரசாத்,
நீடாமங்கலம்

? விக்கல் எப்படி ஏற்படுகிறது? காரணம் என்ன? அதை நிறுத்த என்ன வழி?

நாம் சாதாரணமாக சுவாசிக்கும்போது காற்றை உள் இழுக்கிறோம், இல்லையா? அப்போது நம் மார்புத்தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்குமிடையில் சுவாசப் பைகளை ஒட்டியுள்ள 'உதரவிதானம்' எனும் சவ்வுப்படலமும் விரிந்து கீழ் நோக்கி இறங்குகிறது. இதனால் சுவாசப்பைகளுக்குள் காற்றழுத்தம் குறைகிறது. உடனே குரல் நாண்கள் திறக்கின்றன. நாம் சுவாசிக்கும் காற்று தடையின்றி சுவாசப் பைகளுக்குள் நுழைகிறது. இது இயல்பாக நிகழும் நிகழ்ச்சி. சில சமயங்களில் உதரவிதானம் முறையாகச் சுருங்கி விரிவதில்லை. இதனால் சுவாசப்பைகளில் உண்டாகும் காற்றழுத்த வேறுபாடு காரணமாக குரல் நாண்கள் சரிவரத் திறப்பதில்லை. இம்மாதிரி சமயங்களில் நாம் சுவாசிக்கும்போது காற்று குரல் நாண்களின் குறுகிய இடைவெளி வழியாக சுவாசப்பைகளுக்குள் நுழைய வேண்டியுள்ளது. எப்படி ஒரு புல்லாங்குழலின் காற்றுத்துளையைக் கொஞ்சம் அடைத்து விடும்போது இனிய ஒலி உண்டாகிறதோ, அப்படித்தான் குரல் நாண்களின் குறுகிய இடைவெளியில்' காற்று செல்லும்போதும் 'விக்... விக்...' எனும் விநோத ஒலி ஏற்படுகிறது. இதை நாம் 'விக்கல்' என்கிறோம். நாம் அவசர அவசரமாகச் சாப்பிட்டால் விக்கல் வரும். மிகவும் சூடான உணவைச் சாப்பிட்டாலும் விக்கல் வரும். அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு, சரியான அளவு தண்ணீர் குடிக்கா விட்டால் விக்கல் ஏற்படும். அஜீரணம் ஏற்பட்டால் விக்கல்




● நா. திவ்யா,
திப்பிராஜபுரம்

? நான் மிகவும் ஒல்லியாக உள்ளேன். நான் ஆரோக்கியம் அடைவதற்கு என்ன வழி, டாக்டர்?

! திவ்யா, உன்னுடைய உயரம், எடை எதையும் நீ குறிப்பிடவில்லை. பொதுவாக, ஒல்லியாக இருப்பதற்குக் குடும்பப் பரம்பரை முக்கிய காரணமாக இருக்கும். உன் வீட்டில் அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி யாராவது ஒல்லியாக இருந்தால், நீ ஒல்லியாக இருப்பதைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். உன் குடும்ப மருத்துவரிடம் சென்று உன் உயரத்திற்கு ஏற்ற உடல் எடையைத் தெரிந்துகொள். உன் உடலில் வேறு நோய்கள் எதுவும் இல்லை என்பதையும் உறுதி செய்துகொள். பின்பு உடலுக்கு உறுதி தரும் புரதம் மற்றும் கொழுப்பு உணவுகளை அதிகமாகச் சேர்த்துக்கொள். தினமும் ஒரு மணி நேரம் விளையாட வேண்டும். அல்லது உடற்பயிற்சி,

காண்டாக்ட் லென்ஸ் அணிவது நல்லதா?





கேட்கட்டுமா டாக்டர்?



வரும். அதேநேரத்தில் மூளைக் காய்ச்சல், முற்றிய சர்க்கரை நோய், கல்லீரல் நோய், சிறுநீரகக் கோளாறுகள், இரைப்பைப் புற்றுநோய், குடல் அடைப்பு ஆகிய ஆபத்தான நோய்களின் போதும் விக்கல் வரும். எனவே, அடிக்கடி விக்கல் வந்தால் மருத்துவரை அணுக வேண்டியது அவசியம். சாதாரண விக்கலை நிறுத்த, விக்கல் ஏற்பட்டதும் ஒரே மூச்சில் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அடுத்த வழி, மூச்சை அடக்கி அடக்கி வெளிவிட வேண்டும். இப்படி 5 நிமிடங்களுக்குச் செய்தால் விக்கல் நின்று விடும். இன்னொரு வழி இது: ஊதினால் விரியக்கூடிய ஒரு பைக்குள் அல்லது பலூனுக்குள் வாய் வைத்து ஊத வேண்டும். ஊதிய காற்றையே மீண்டும் வாய் வழியாக உள்



டாக்டர் கு. கணேசன்

இழுக்க வேண்டும். இப்படி செய்தால் 3 நிமிடங்களில் விக்கல் நின்று விடும்.

• வ. அழகர்சாமி,
கொளத்தூர்

? கண்களில் 'கான்டாக்ட் லென்ஸ்' அணிவது நல்லதா?

கிட்டப்பார்வை, தூரப்பார்வை ஆகிய கண் குறைபாடுகளைச் சரி செய்ய முன்பு மூக்குக் கண்ணாடியைப் பயன்படுத்தினார்கள். சிலருக்குத் தடிமனான கண்ணாடி அணிய வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால் அவர்களுக்குச் சில நடைமுறைச் சிரமங்கள் ஏற்படலாம். இதைத் தவிர்க்க 'கான்டாக்ட் லென்ஸ்' உதவுகிறது. கான்டாக்ட் லென்ஸைத் தேவைப்படும்போது மட்டும் கண்ணில் ஒட்டிக் கொள்ளலாம். தேவைப்படாதபோது அதை எடுத்து வைத்து விடலாம். கான்டாக்ட் லென்ஸை அணிவதால் முகத்தின் அழகு கெடுவதில்லை. நாமாகச் சொன்னால் தவிர, கான்டாக்ட் லென்ஸ் அணிந்திருப்பது மற்றவர்களுக்குத் தெரியாது. கான்டாக்ட் லென்ஸ் அணிவதால் கண்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் வராது.


• க. துளசிராமன்,
கடம்பரவாழ்க்கை

? ஒரு சராசரி மனிதன் உணவில்லாமல் எத்தனை நாட்கள் உயிர் வாழ முடியும்?


! உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் உணவு மிக மிக அவசியம். ஒரு சராசரி மனிதன் உணவில்லாமல் 7லிருந்து 20 நாட்கள் வரை உயிர் வாழ முடியும். நியூசிலாந்து நாட்டில் ஸ்டீபன் டெய்லர் என்பவர் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு 40 நாட்கள் உயிர் வாழ்ந்தார். விலங்குகளில் ஒட்டகம் தனக்கு வேண்டிய தண்ணீரைப் பல நாட்களுக்குச் சேமித்து வைத்துக் கொள்ளும் இயல்புடையது. நாய் உணவு இல்லாமல் 20 நாட்களுக்கு உயிர் வாழும். மூட்டைப்பூச்சி உணவு இல்லாமல் ஓராண்டுக்கு உயிர் வாழும்.







24 மணி நேரம் மட்டும் உயிர் வாழும் ஒரே உயிரினம் எது என்று கேட்டால் சட்டென்று, 'ஈசல்' என்று சொல்லி விடலாம். இந்த ஈசல் மூன்று வருடம் வாழ்கிறது என்றால் ஆச்சர்யம் தானே! ஈசல் என்ற இந்த 'மே பூச்சி' லார்வா




பருவத்திலேயே 3 வருடம் முழுவளர்ச்சியடைந்து தான் பின்பு இறக்கைகள் முளைத்து வெளி வந்து ஒரே நாளில் இறந்து விடுகிறது!

– ப. காளிதாசன்,
நீர்விளாங்குளம்.

குணம் மாறும் அதிசய ஏரி!

திபெத் நாட்டில் ஒரு ஏரி இருக்கிறது. அதன் பெயர் யுரோட் சோலேன் ஏரி. இந்த ஏரி ஒரு மாபெரும் ஆச்சரியத்தைக் கொண்டிருக்கிறது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு நல்ல நீராக இருப்பது உப்பு நீராக மாறி விடுகிறது. அதேபோல் அடுத்த பன்னிரண்டு



வருடத்திற்குப் பிறகு உப்பு நீராக இருப்பது நல்ல நீராகவும் மாறி விடுகிறது. இதற்கான காரணம் என்னவென்று இன்னும் கண்டறியப்பட வில்லை.

– ராமகிருஷ்ணன், காயக்காடு.

சர்வதேசக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப் பதற்காக உருவாக்கப்பட்ட போலீஸ் அமைப்பு, 'இன்டர்போல்'. இதன் தலைமையகம் ஃபிரான்சி லுள்ள பாரீஸ் நகரில் இருக்கிறது. சர்வதேசக் கடத்தல், சர்வதேசத் தீவிரவாதிகள், ஒரு நாட்டில் குற்றம் செய்து விட்டு இன்னொரு நாட்டில் தலைமறைவாகி விடும் குற்றவாளிகள் ஆகி யோரைக் கண்டுபிடிப்பதுதான் இதன் வேலை. இந்த அமைப்பு 1923ல் உருவாக்கப்பட்டது. நூறு நாடுகளுக்கு மேற்பட்ட போலீஸ் இலாகாக்கள் இந்த அமைப்பில் பங்கேற்று ஒத்துழைக்கின்றன.

– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

ரோமானிய நாகரிகத்தில் முக்கிய பங்கு வகித்த ரோமானியக் குளியலறைகள், நீச்சல் குளங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட பைப்புகள் இன்று கூட கெடாமல் இருக்கின்றன. அவை எந்த உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன தெரியுமா? ஈயத்தால் செய்யப்பட்டிருந்தன. ரோமானியர்கள் ஈயத்திற்கு பிளம்பம் என்று பெயரிட்டனர். அதில் இருந்துதான் பைப் சம்பந்தமான வேலைகள் பிளம்பிங் என்றும்,



அவ்வேலையைச் செய்பவர்களை 'பிளம்பர்' என்றும் அழைக்கும் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

– ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிசெட்டிபாளையம்.


பொதுவாகக் காகங்களால் உயரமாகப் பறக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட உயரம்



வரைதான் பறக்கும். ஆனால் காகங்களில் சிவப்பு நிறக் கால்களைக் கொண்ட காகங்கள் மட்டும் உயரமாகப் பறக்கின்றன. இக் காகங்கள் கடல் மட்டத்திலிருந்து 8200 மீட்டர் உயரம் பறக்கின்றன.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.


ஒட்டகத்தால் ஒரே நேரத்தில் 90 லிட்டர் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க முடியும். ஒட்டகம் தன் வயிற்று அறையில் 'ரூமன்' என்ற பகுதியில் நீரைச் சேமித்து வைக்கிறது. நீர் கிடைக்காத சமயங்களில் சேமித்து வைத்துள்ள நீரைப் பயன்படுத்திக் கொள்கிறது. பாலைவனத்தில் கால்



புதையாமல் நடப்பதற்கு அகன்ற, மெத்தை போன்ற பாதங்களை ஒட்டகம் பெற்றிருக்கிறது.

– சு. கண்ணகி மிட்டூர்.


நியூசிலாந்தில் பத்திரிகைத்தாள், மரக்கூழ் இவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பைன் மரங்கள் வடக்குத் தீவில் ஆக்லாந்து மாகாணத்தில் உள்ள கைங்காரோ காட்டிலிருந்து கிடைக்கின்றன. ஆக்லாந்து மாகாணத்தின் தென் பகுதியில் மரக்கன்றுகளை நட்டு உண்டாக்கப்பட்ட கைங்காரோ காட்டின் பரப்பு 2,85,000 ஏக்கர்கள். மனிதனால் உண்டாக்கப்பட்ட



காடுகளில் உலகத்திலேயே பெரியது இதுதான்.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

மீன்களில் சுமார் 1,500 வகைகள் இருக்கின்றன. இவற்றில் மிகப் பெரியது திமிங்கலச் சுறா. 21 மீட்டர் நீளம் வரை வளரும்.



மீன்களில் மிகவும் வேகமாக நீந்தக்கூடியதும் இதுதான்.

– பி. ராஜசேகரன், மதுரை.


டைகோபிராஹே என்பவர் புகழ்பெற்ற டென்மார்க் நாட்டு வானவியல் அறிஞர்.



முன்கோபமும், எதற்கெடுத்தாலும் சண்டை போடும் குணமும் கொண்டவர். கணக்கில் ஒரு விஷயம் குறித்து நண்பருடன் சண்டை ஏற்பட்டது. இருவரும் வாளை உருவிக் கொண்டு போர் செய்தனர். இதில் பிராஹேவுடைய மூக்குத் துண்டிக்கப்பட்டு விட்டது. அதன் பிறகு அவர் வாழ்ந்த காலம் வரை உலோகத்தினாலான மூக்கை அவர் அணிய வேண்டியதாயிற்று.

— ஜி.எஸ். கார்த்திக் சபரி, கோபிசெட்டிபாளையம்.


கடல்வாழ் உயிரினங்களில் முத்துச்சிப்பியும் ஒன்று. இந்தச் சிப்பியினுள் நுண்ணிய தூசி சென்று விட்டாலும் போதும். சிப்பியினுள் ஒரு



வகை திரவம் சுரந்து, அந்தத் தூசியைச் சுற்றி உருண்டையாகக் கூடு போல உருவாகிவிடும். இது நாளடைவில் முத்தாக உருவாகும். இது இயற்கை முத்து. செயற்கை முறையிலும் சிப்பியினுள் புறப் பொருளைச் செலுத்தி விடுவார்கள். அப்பொழுதும் அந்தத் திரவம் சுரந்து, அது முத்தாகி விடும். இவ்வகை முத்து செயற்கை முத்து எனப்படும்.


— மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

உலகிலுள்ள பிராணிகளின் உருவத்தையும், அவை தாண்டும் உயரத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் வெட்டுக் கிளிதான் மிக அதிக உயரம் குதிக்கும் பிராணி. இது தன் உயரத்தைப்



போல 500 மடங்கு கூடுதலான உயரத்திற்கு எகிறிக் குதிக்கிறது!

— க. பூங்கொடி, சித்தோடு.



சந்தன மரத்தை விதைகள் மூலம்தான் வளர்க்க இயலும். வேறு பல மரங்கள் போல் கொம்புகளை வெட்டி வளர்க்க இயலாது. இம்மரத்தைத் தனியாகவும் வளர்க்க இயலாது. அருகில் வேறு சில மரங்களை நட்டால்தான் அவை வளரும். ஏனென்றால் அது ஒரு சாறுண்ணி மரம். இவ்வகை மரங்களை ஒருவகை நோய் தாக்குவதால் நம் நாட்டுக்குக் கணிசமான பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது.

— பெ. நடராசன், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை. இராமநாதபுரம்.


- எறும்புத் தின்னி, ஒரே இரவில் இரண்டு லட்சம் எறும்புகளைத் தின்று விடக்கூடியது.



- ஃபிரான்ஸ் நாட்டில் கொசுக்களே கிடையாது.
- குவைத் நாட்டில் காக்கைகளே கிடையாது.

— ஆர். பிரசன்னா, காந்திகிராமம்.

ட்ரிங்...ட்ரிங்...




மின்சாரத்தின் உதவியால் ஒலியை அனுப்ப பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே விஞ்ஞானிகள் முயன்று வந்தனர். 'சார்லஸ் பௌர்சியூல்' என்ற ஃபிரான்ஸ் விஞ்ஞானி தான் இதற்கு முன்னோடியாக இருந்தார். ஒரு இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு ஒலியை அனுப்ப 1861ம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த 'ஜோஹன் பிலிப்' பல்வேறு உபகரணங்களைக் கையாள ஆரம்பித்தார். அமெரிக்க விஞ்ஞானிகளான, எலிஷா கிரேயும், அலெக்சாண்டர் கிரகாம்பெல்லும் மின்சாரத்தை உபயோகித்து நாம் பேசுவதை பிற இடங்களுக்கு அனுப்ப / ஒலி பரப்ப 1870ல் சாத னங்களை உருவாக்கினர். 1876 மார்ச் 7ல் அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சர்வ உரிமத்தைத் தொலை பேசி தயாரிப்பிற்காகப் பெற்றார். 1877ல் மணியுடன் கூடிய தொலைபேசி தயாரிக்கும் நிறுவனத்தை கிரகாம் பெல் ஆரம்பித்தார். 'மஸ்ஸாசுஸெட்' பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் உடற்கூறு இயல் துறையில், குறிப்பாக 'ஒலி' பிரிவில் பேராசிரியராகப் பணி புரிந்தவர் 'அலெக் ஸாண்டர் கிரகாம் பெல்'.

தொலைபேசியில் முதன் முதலாக பேசப்பட்ட வார்த்தைகள் : "மிஸ்டர் வாட்சன், இங்கே வாருங் கள். உங்களின் வருகை தேவைப்படுகிறது." 1876 மார்ச் 10 அன்று தொலைபேசி சம்பாஷனையை அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் இப்படித்தான் ஆரம்பித்து வைத்தார்.

தொலைபேசி என்று தமிழில் அழைக்கப்படும் டெலிபோன் கிரேக்கச் சொல். கிரீக் மொழியில் 'டெலி' என்றால் தூரம்/தொலைவு எனப் பொருள். 'போன்' என்றால் சத்தம் / ஒலி எனப் பொருள். தற்போது உபயோகத்தில் இருக்கும் காதில் வைத் துக் கொள்ளும் பகுதியையும் வாய் அருகே வைத்துப் பேசும் பகுதியையும் சேர்ந்தாற்போல் ஒரே அமைப்போடு தொலை பேசியில் ஏற்படுத்தியது 1933ல். விரலால் அழுத்து கிறாற்போல் பட்டன்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தொலைபேசிகள் 1960ல் அறிமுகப் படுத்தப்பட்டன. நவீனப்படுத்தப்பட்ட மின்னணு நுட்பங்களுடன் கூடிய தொலைபேசிகள் 1980ல் உருவாகின. 'கார்ட்லெஸ்' தொலைபேசிகள் 1995ல் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது அதி நவீன செல்போன்கள் வந்துவிட்டன. இது மிகவும் வசதி யானது. எங்கே சென் றாலும் கையில் எடுத் துச் செல்லலாம்.

- எஸ். ராஜகோபால்,
திருச்சி.





ஸ்பெயின் : 'ஸ்பெயின்' என்ற சொல் 'ஸ்பேனியா' என்ற சொல்லிலிருந்து வந்தது. இதற்கு முயல்களின் நாடு என பொருள். இந்நாட்டில் அளவுக்கதிகமாக முயல்கள் வாழ்வதால் ஸ்பெயின் எனப் பெயர் பெற்றது.

பெல்ஜியம் : புராதன கௌல் இன மக்களுக்கு 'பெல்கே' என்று பெயர். எனவே, அவர்கள் வாழ்ந்த இந்நாடானது 'பெல்ஜியம்' என்று பெயர் பெற்றது.

ஃபிரான்ஸ் : கி.பி. 400 வரை இந்நாடு 'கௌல் நாடு' எனப்பட்டது. ரைன் நதிப் பகுதியில் வாழ்ந்த ஃபிராங்ஸ் என்னும் இனத்தவர்கள் 'கௌல்' இனத்தாரை வென்று ஆட்சியைக் கைப்பற்றினர். இதனையடுத்து அந்நாடு ஃபிராங்ஸ் என அழைக்கப்பட்டது. இதுவே நாளடைவில் ஃபிரான்ஸ் ஆனது.

பிலிப்பைன்ஸ் : இந்நாட்டை கி.பி. 519ல் ஸ்பெயின் நாட்டு மாலுமி மெகல்லன் கண்டு பிடித்தார். அவருடைய கடல் பயணத்துக்கு அந்நாட்டின் 'பிலிப்' என்ற மன்னன் பெரிதும் உதவியதால், மெகல்லன் தான் கண்டுபிடித்த தீவிற்கு 'பிலிப்பைன்ஸ்' எனப் பெயரிட்டார்.

ஹாலந்து : டச்சு மொழியில் 'ஆலண்ட்' என்றால் 'சதுப்புநிலம்' எனப் பொருள். இந்நாட்டில் சதுப்பு நிலங்கள் அதிகம் காணப்பட்டதால் டச்சுக்காரர்களால் இந்நாடு 'ஆலண்ட்' என்றழைக்கப்பட்டது. இது பின்னர் 'ஹாலண்ட்' ஆனது.

- ஆர்.பிரசன்னா, கரூர்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ம	கு	டி	■	ர்	ட	ண்	யா	2 லி
த்	■	■	■	ச	■	3 ஆ	■	ல்
4 த	வ	ளை	■	ச்	■	■	சை	5 அ
ள	■	■	6 வே	7 த	ம்	■	■	■
ம்	ப	8 கோ	■	■	■	9 தே	ச	ம்
■	■	■	10 க	ள்	ளி	■	■	ன
தை	11 வி	■	■	ரு	■	ரை	ம	12 தா
த்	■	13 ச	■	ரி	■	■	■	மா
14 அ	மெ	ரி	க்	15 கா	■	கு	ங்	16 ச

புதிர் உலகம்

விடைகள் :


I. 315

II. 1. பஞ்சாப், 2. கேரளா, 3. கிருஷ்ணா, 4. இந்திரா காந்தி, 5. வைகாசி விசாகம்

III. சேகர் = ரூ.210
சுந்தர் = ரூ.191
பாஸ்கர் = ரூ.174

IV. 4 தாள்கள் (89, 90 ஒரே தாள்)

V. வியாழக்கிழமை (கரடி பொய் சொல்லும் நாள்)




அன்பான

மனிதன் காட்டு விலங்குகளைத் தம் தேவைக்காக அழைத்து வந்து வீட்டு விலங்காக்கி விட்டான். அப்படி வீட்டு விலங்காகிய பிராணிகளில் குதிரையும் ஒன்று.


குதிரையின் பிறப்பிடம் ஆசியா கண்டம். மத்திய ஆசியாவில் வாழ்ந்த நாடோடி மக்களால் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களின் நாடோடி வாழ்க்கைக்குக் குதிரையில் சவாரி செய்யவும், பொருட்களைச் சுமந்து செல்லவும் மிகவும் வசதியாக இருந்திருக்கிறது.

இதன் மூலம் நீண்ட தூரம் செல்லவும், புதிய இடங்களை ஆக்கிரமிக்கவும் முடிந்திருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பில் குதிரைகளும், குதிரை வீரர்களும் பெரிதும் பயன்படுத்தப்பட்டனர். காலப் போக்கில் போர்களில் குதிரைப்படை முக்கியமாகிவிட்டது. பின்பு உழவுத் தொழிலில் மாடுகளுக்குப் பதில் குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. போக்குவரத்



எஸ். சுஜாதா

துக்கு வண்டிகள் தோன்றியவுடன் அவற்றை இழுத்துச் செல்லும் பொறுப்பையும் குதிரைகள் ஏற்றுக் கொண்டன.



இழுக்கக் கூடியவை. சில சற்று வலிமை குறைந்தவை. இவை மிக வேகமாகப் பந்தயங் களில் ஓடக்கூடியவை.

குதிரை மிகவும் அறிவுள்ள பிராணி. தனக்குக் காட்டும் அன்பை விரைவில் உணர்ந்து கொண்டு, அதன்படி நடக்கும். அதே போல் குதிரைக்கு யாராவது தீங்கு செய்தாலும் நெடுங்காலம் வரை மறக்காது.

குதிரையின் தோலில் முடி அடர்த்தியாக வளர்ந்திருக்கும். ஆண்டு தோறும் முடி கோடைக் காலத்தில் உதிர்ந்து விடும். அப்போது குதிரையின் தோல் வழுவழுப்பாகக் காட்சி தரும். நீண்ட வாலை

பிராணி



நன்றாகப் பழக்கிய குதிரையின் கடிவாளத்தை நீக்கிவிட்டு சவாரி செய்பவரை ஏற்றி அனுப்பினால் உரிய இடத்தில் சேர்த்து விட்டு, மீண்டும் தன் எஜமானிடத்திற்கே வந்து சேர்ந்து விடும்.

பொருட்களை வண்டியில் கொண்டு வந்து வாடிக்கையாகக் கொடுக்கும் வீடுகளுக்குச் சில தடவை போய்ப் பழக்கி விட்டால் போதும். பிறகு தானே இவ்வாடிக்கை வீடுகள் தோறும் நின்று, நின்று பொருட்களைக் கொடுத்து விட்டுச் செல்லும்.


குதிரைகளில் பல வகைகள் உள்ளன. சில வகை குதிரைகள் மிகவும் பெரியவை; வலுவானவை. இவை கனமான வண்டிகளையும் விவசாய எந்திரங்களையும்

அடிக்கடி ஆட்டியபடி இருக்கும் குதிரை. இதன்மூலம் ஈ, கொசு போன்றவற்றை விரட்டும்.

தலை நீண்டது. ஆண் குதிரைக்கு 40 பற்களும் பெண் குதிரைக்கு 36 பற்களும் உண்டு. இது புல்லை மேயும்போது

தரையோடு தரையாகக் கடிக்கும். முன் பற்களுக்கும் கடைவாய் பற்களுக்கும் இடையே இடைவெளி உண்டு. அதில்தான் கடிவாளம் பொருந்தியிருக்கும்.

குதிரையின் வயதை அவற்றின் பற்களிலிருந்தே கண்டறிந்து விடுவார்கள். இவற்றின் முன் பற்களில் ஆழமான குழி ஒன்று இருக்கும். அந்தக் குழி தேய்ந் திருப்பதை வைத்தே வயதைக் கணிக் கிறார்கள். குதிரை பிறக்கும்போதே 2 பற்கள் முளைத்திருக்கும். 9 வாரமாகிற போது 4 முன்பற்கள் தோன்றி யிருக்கும். 2 1/2 ஆண்டில் முன் பற்கள் விழுந்து நிலையான பற்கள் தோன்றும்.



குதிரையின் காதுகள் நன்றாக அசையும், ஒலி வரும் திசையை நோக்கித் திருப்பி ஒலியலைகளைப் பிடித்து வாங்கும். கேட்கும் சக்தி மிகக் கூர்மையானது. அதே போல் மோப்ப சக்தியும் அதிகம். புதிய பொருட்களைக் கண்டால் குதிரை மிரளும். அப்பொருளை நுகரச் செய்து பழக்கப் படுத்தினால் பழகிவிடும்.

குதிரையின் கால்கள் உறுதியானவை. 40 மைல் வேகத்தில் ஓடக் கூடியவை.

குட்டி 11 முதல் 12 மாதங்கள் வரை தாயின் வயிற்றில் இருக்கும். பிறந்த சிறிது நேரத்திற்கெல்லாம் குட்டி எழுந்து நடக்கும்; ஓடும். குதிரைகள் திறந்த புல்வெளிப் பிரதேசங்களில் வாழ வேண்டியிருப்பதால் உடனே எதிரிக்குப் பயந்து எழுந்து ஓட வேண்டிய நிர்பந்தம்.


ஓட்ஸ், பார்லி, மக்காச்சோளம், கொள்ளு முதலியவை இவற்றின் முக்கிய உணவு. இது தவிர பச்சை, காய்ந்த புல்லையும் சாப்பிடும்.

குதிரையை வளர்ப்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது நடக்கவோ அல்லது மெதுவாக ஓடவோ வைக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு மூன்று வேளை தீனி கொடுக்க வேண்டும். தீனி கொடுப்பதற்கு முன் தண்ணீர் நிறையக் குடிக்க வைக்க வேண்டும். உடலைச் சுத்தம் செய்து மசாஜ் கொடுக்க வேண்டும். கால்களில் உள்ள குளம்புகளை அடிக்கடி சீவிச் செம்மைப்படுத்த வேண்டும். குதிரையின் லாயத்தை வெப்பம் அதிகமாகாமல் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். காற்று நன்கு வர வேண்டும்.

குதிரைகளால் வெப்பமான பாலைவனங் களிலும், குளிர்ப் பிரதேசங்களிலும் கூட வாழ முடியும். எந்தச் சூழ்நிலைக்கும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளக் கூடியவை இவை.

இன்று உலகின் எல்லா இடங்களிலும் குதிரைகள் வாழ்கின்றன. கழுதை, வரிக்குதிரை இவற்றின் உறவினர்களே!



கோகுலம் நிழல்

மக்கள் தொகை

1991 - 2001 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்தியாவின் மக்கள் தொகை 102 கோடியே 70 லட்சத்து 15 ஆயிரத்து 247 ஆக உயர்ந்துள்ளது. இதில் தமிழக மக்கள் தொகை 6 கோடியே 21 லட்சத்து 10 ஆயிரத்து 839. சென்னையில் மட்டும் 42,16,268 மக்கள் வசிக்கின்றனர். இரண்டாவது இடத்தில் கோவையும் மூன்றாவது இடத்தில் மதுரையும் அங்கம் வகிக்கின்றன. தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்றவர்கள் 73.47 சதவீதம் பேர். கிராமங்களில் உள்ள மக்களிடையே அதிக கல்வியறிவு பெற்ற மாவட்டம் கன்னியாகுமரி. குறைந்த கல்வி அறிவு கொண்ட மக்கள் வசிக்கும் கிராமங்கள் கொண்ட மாவட்டம் தர்மபுரி.

உணவு தானியம்

கடந்த ஆண்டு இந்தியாவின் வட மாநிலங்களில் அதிக அளவு மழை பெய்தது. இதனால் மகசூல் அதிகரித்தது. இதன் காரணமாக அளவுக்கு அதிகமான உணவு தானியங்களை ஸ்டாக் வைக்க வேண்டியதாயிற்று. இந்திய உணவுக் கிடங்குகளில் இடம் இல்லாததால் கிடங்குக்கு வெளியே திறந்த வெளியில் உணவு தானியங்களை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.


இந்திய உணவுக் கழகத்திடம் 5 கோடி டன் உணவு தானியங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இதில் தேவைக்குப் போக சுமார் 70 லட்சம் டன் உணவு தானியங்கள் மித மிஞ்சிய அளவில் உள்ளன. இந்தத் தானியங்களை எலிகளும், கரையான்களும் சாப்பிட்டு வீணாக்குகின்றன. ஒருபுறம் அளவுக்கதிகமான உணவுப் பொருட்கள், மறுபுறம் ராஜஸ்தான், ஒரிசா, குஜராத், மகாராஷ்டிரா, சட்டிஸ்கர், இமாச்சல் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பட்டினியால் சாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் வீணாகிப் போகி உணவுப் பொருட்களைக் கடலில் கொட்டுவதைவிட ஏழை மக்களுக்கு வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உச்சநீதி மன்றம் அறிவுறுத்தியிருக்கிறது.

கடிதங்கள்...

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கிரெக் சாப்பல் தான் சம்பந்தப்பட்ட நினைவுப் பொருட்களை ஏலம் விட முடிவு செய்தார். இந்த ஏலத்தில் பிரபல கிரிக்கெட் வீரர் பிராட்மேன் சாப்பலுக்கு எழுதிய கடிதங்களும் இடம் பெற்றிருந்தன. தனிப்பட்ட முறையில் பிராட்மேன் எழுதிய கடிதங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த பிராட்மேன் ஃபவுண்டேஷன் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆட்சேபம் தெரிவித்தனர். இதையடுத்து இக்கடிதங்களை ஏலத்தில் எடுத்த தனியார் நிறுவனம் பிராட்மேன் குடும்பத்தாரிடம் கடிதங்களை ஒப்படைத்தது.

தடை

தமிழ்நாட்டில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு பாலிதீன் பைகளின் பயன்பாடு மற்றும் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்குத் தமிழக அரசு தடை கொண்டு வர இருக்கிறது. பொதுமக்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் இதனை வரவேற்றுள்ளனர்.




• பாதிக்கப்பட்ட நுரையீரல்

என்னைத் தெரியுமா?


உங்களுக்கு ஒரு சின்ன க்விஸ். நான் இல்லாமல் இரத்தத்தைச் சுத்தப்படுத்தாமல் நீங்கள் உயிர்வாழ முடியாது. உடலின் மையப் பகுதியில் வாழ்பவன் – நான் யார்?

நுரையீரல். இப்போது உங்களுடன் உரையாடுவது உங்களின் வலது நுரையீரல். எனது பங்காளியை (இடது நுரையீரல்)விட எனக்குத்தான் உரிமை அதிகம். ஏன் தெரியுமா? நான் உருவத்தில் பெரியவன். என் பங்குக்கு மூன்று அறைகள். பங்காளியிடம் இரண்டு அறைகள் மட்டுமே. என்னை நேரில் பார்த்தால் அசந்து விடுவீர்கள். நான் பூவினும் மென்மையானவன். ஸ்பாஞ்ச் போல மெத் மெத்தென்று இருப்பேன். நீங்கள் பிறந்த போது, அழகான 'பிங்க்' நிறத்தில் இருந்தேன். ஆனால், இப்போது சிகரெட் புகையாலும், காற்றிலுள்ள தூசுகளாலும் அடைபட்டு, அசிங்கமாய் கருத்துப் போய் இருக்கிறேன். எல்லாம் சுற்றுச் சூழலை நீங்கள் படுத்தும் பாடால்தான்.



• நல்ல நுரையீரல்

உங்களின் மார்புக்கூடு. இதிலுள்ள மூன்று அறைகளில் இரண்டு எனக்கும், ஒன்று என் பங்காளிக்கும். இருவருக்கும் இடையில் ஜம்மென்று அமர்ந்திருப்பவர் 'இதயம்'. நான் வலது பக்க அறையை அடைத்துக் கொண்டு தொங்குகிறேன். என் எடை மட்டும் 1/2 கிலோ.



• காற்று உள்ளே சென்று வெளியேறுதல்

காற்றே... நீ... உள்ளே செல்ல!


என்னிடம் தசைகளே இல்லாததால், காற்று எளிதில் புகுந்து விரிந்து சுருங்க வசதியாக இருக்கிறேன். என் அறைக்கும், எனக்குமிடையே கொஞ்சம் வெற்றிடம் இருப்பதால், பெர்னால்ஸின் விதிப்படி வெளிக்காற்று உள் நோக்கி உறிஞ்சப்படுகிறது. நீங்கள் என்னுள் உள்ள முழுக் காற்றையும் வெளியேற்றிவிட்டால், உருக்குலைந்து சிதைந்து விடுவேன். ஏதேனும்

சுவாசமே..!

விபத்து ஏற்பட்டு, மார்புக் கூட்டில் ஓட்டை ஏற்பட்டு, வெற்றிடம் உடைந்து போனால் நான் வேலை செய்வதை நிறுத்திவிடுவேன். நீங்களும் சுவாசிப்பதை மறந்து விடுவீர்கள். விரைவில் ஓட்டையை அடைத்து, வெற்றிடம் ஏற்பட்டால்தான் உயிர் உங்கள் உடலில் தங்கும்.

என்ன விலை அழகே...

என் அழகான, அற்புதமான கட்டமைப்பைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களின் தொண்டையிலிருந்து பிறவி எடுக்கிறேன். அங்கே என் பெயர் காற்றுக் குழல். 10 செ.மீ. நீளம்தான். அதன்பின் நானும், என் பங்காளியும் இரு பகுதிகளாகப் பிரிகிறோம். அங்கே எங்களைப் பார்த்தால், தலைகீழாய் தொங்கவிடப்பட்ட குட்டி மரம்போல் காட்சியளிப்போம். பின் குழாய்கள் சிறு, சிறு கிளைகளாகப் பிரிந்து, சிறிய காற்றுக் குழாயில் முடிகிறது. இங்கேயுள்ள காற்றுப் பாதையின் விட்டம் 1/40 செ.மீ. மட்டுமே! இவற்றின் வழியே காற்று வந்து போகும். என்னுடைய உண்மையான பணி நடக்குமிடம் இவற்றின் நுனியில் உள்ள குட்டி, குட்டி பலூன் போன்ற காற்றறைகளில் தான். இவை திராட்சைப் பழ குலைகள் போல் தொங்கும். அனைத்து காற்றறைகளையும் இணைத்து விரித்தால் டென்னிஸ் கோர்ட்டில் பாதியளவு இருக்கும்.



கலர் மாறிப் போச்சே..

ஒவ்வொரு காற்றறையும் தந்துகி வலைப் பின்னலால் மூடப்பட்டிருக்கும். சுத்தம் செய்யப்பட வேண்டிய இரத்தம், இதயத்திலிருந்து தந்துகிக்கு வந்து சேருகிறது. இதிலுள்ள சிவப்பணுக்கள் கரியமில வாயுவை உடலின் பல் பகுதிகளிலிருந்து எடுத்து வந்து, என் காற்றறைக்குள் கொட்டுகின்றன. அப்போது இதிலுள்ள இரத்தம் கருநீல நிறத்தில் இருக்கும். பின் இங்குள்ள ஆக்ஸிஜனைச் சிவப்பணுக்களிலுள்ள 'ஹீமோகுளோபின்' என்ற நிறமி 'டபக்'கென்று பற்றிக் கொள்கிறது. இரத்தம் 'செர்ரி பழ' நிறத்தில் மாறி ஆக்ஸிஜனை சுமந்து புத்துணர்வுடன் இதயம் நோக்கிப் பாய்கிறது. இதுதான் என்னுள் நிகழும் அற்புதம். உங்களின் வேலைக்கான, சக்திக்கான காரணி - ஆக்ஸிஜன் - என்னிடமிருந்துதான் உடலெங்கும் செலுத்தப்படுகிறது.

காற்றின் அளவு

நீங்கள் ஒன்றுமே செய்யாமல் கண்மூடிப் படுத்திருந்தாலும், நீங்கள் சுவாசிக்கும் காற்றின் அளவு எவ்வளவு தெரியுமா? நிமிடத்திற்கு 9 லிட்டர் காற்று தேவை. உட்கார்ந்திருந்திருந்தால் 18 லிட்டர் காற்று வேண்டும். நடந்தால் 27 லிட்டர், ஓடினால் 56 லிட்டர்

தேவை. மேஜையில் அமர்ந்து வேலை செய்பவர்களுக்குக் குறைவான ஆக்ஸிஜன் போதும். நிமிடத்திற்கு 16 லிட்டர் உள்ளிழுக்கிறீர்கள். ஒவ்வொரு உள்ளிழுப்புக்கும் 1/2 லிட்டர் காற்று மட்டுமே என்னுள் நுழைகிறது. இது என்னை லேசாக விரிவடையச் செய்யும். இதைப் போல் இன்னும் 8 மடங்கு அதிகமாய் என்னால் விரிவடைய முடியும். ஒரு மூச்சில் உள்ளிழுக்கும் 1/2 லிட்டர் காற்றும் அப்படியே காற்றறைக்குள் செல்வதில்லை. இதில் 150 மில்லி காற்றுக்குழாய் மற்றும் காற்றுப் பாதையிலேயே தங்கிவிடுவதால், மீதி 350 மில்லிதான் காற்றறைக்குள் நுழைகிறது.

எத்தனை பணியாட்கள்?

எனக்குள் வரும் காற்று ஈரப்பதத்துடனும், மிதமான வெப்பத்துடனும் இருப்பதையே விரும்புகிறேன். இதற்காக கண்ணிலுள்ள கண்ணீர் சுரப்பிகள், மூக்கின் கோழைச் சுரப்பிகள் மற்றும் தொண்டையிலுள்ள சுரப்பிகள் சேர்ந்து ஒரு நாளைக்கு 1/2 லிட்டர் திரவத்தைச் சுரக்கின்றன. அவ்விடங்களிலுள்ள இரத்த நாளங்கள் குளிர் நாட்களில் விரிந்தும், வெப்ப நாட்களில் சுருங்கியும் காற்றை வெப்பமூட்டும் பணியைச் செய்கின்றன.

> நீங்கள் ஒன்றுமே செய்யாமல் கண்மூடிப் படுத்திருந்தாலும், நீங்கள் சுவாசிக்கும் காற்றின் அளவு எவ்வளவு தெரியுமா? நிமிடத்திற்கு 9 லிட்டர் காற்று தேவை.

நான் அப்படியே சாப்பிடுவேன்!

எனக்குத் தீங்கிழைக்க பாக்டீரியா, வைரஸ் எனக் கோடிக்கணக்காக எதிரிகள் உண்டு. இவை மூக்கு மற்றும் தொண்டை வழியே என்னை நோக்கி வரும்போது தொண்டையிலுள்ள 'லைசோசோம்' இவற்றை அழித்துவிடும். அதையும் மீறி உள்ளே நுழையும் தீங்கிழைக்கும் நுண்ணுயிரிகள் என் எல்லைக்குள் நுழைந்துவிட்டால், என்னைச் சுற்றியுள்ள இரத்த வெள்ளையணுக்கள், அவற்றை அப்படியே விழுங்கி கபளீகரம் செய்து விடுகின்றன. காற்றிலுள்ள தூசிதான் எனக்கு மிகப் பெரிய சவால். உடலின் மற்ற பாகங்கள் பாதுகாப்பில் பத்திரமாய் இருக்கும்போது, நான் மட்டும் வெளிக்காற்று நேரிடையாய் படும்படி உள்ளேனே. அதனால்தான் எனக்கு அதிக பாதிப்புகள்.

என்னைக் காப்பவர் யாரோ...

நான் உள்ளிழுக்கும் காற்றைச் சுத்தம் செய்யும் வேலை செய்பவர்கள் மூக்கிலிருக்கும் முடிகளே. தூசுத் துகள்களைத் தன்வசம் இழுத்துக் கொள்கின்றன. மூக்கு மற்றும் தொண்டையிலுள்ள கோழைப்படலம் காற்றிலுள்ள மிக நுண்ணிய துகள்களையும் தன் மேல் ஒட்ட வைத்து, எனக்குள் நுழைவதைத் தடுக்கின்றன. ஆனால் உண்மையில் சுத்திகரிப்பு வேலையைச் செய்பவை, காற்றுப்பாதையிலுள்ள கண்ணுக்குத் தெரியா சிலியாக்களே. இவை கோடிக்கணக்கான தூசுத் துகள்களை இழுக்கின்றன. இவை ஒரு வினாடியில் 12 முறை அசைந்து செயல்படுகின்றன. இவற்றின் செயல்பாடு அற்புதமானவை.

என்னைப் பாதுகாக்க...

நீங்கள் புகைக்காவிடில் உங்களின் படுக்கையறையில் 8 மணி நேரமும், அலுவலகத்தில் 8 மணி நேரமும் எனக்குப் பாதுகாப்பான நேரங்கள். நீங்கள் சின்னச் சின்ன உடற்பயிற்சியும், சரியான உணவும் உட்கொண்டால் என்னைப் பாதுகாக்கலாம். படியேறுதல், நடத்தல், ஓடுதல் போன்றவை என்னுள் அதிகக் காற்றைச் செலுத்தி, எனக்கு நன்மை செய்கின்றன. காலையில் எழுந்து, காற்றுள்ள வெளியிடத்தில் அமர்ந்து, மெதுவாக ஆனால் ஆழமாகச் சுவாசித்தல் எனக்கு மட்டுமே தரும் சிறப்பான பயிற்சி. நீங்கள் வயிற்றை உள்ளுக்கிழுத்து, மூச்சைப் பிடித்து, பின் விட்டு பயிற்சி செய்தால் எனக்கு மிகவும் நல்லது. இதனால் என்னுள்ளே ஆழத்தில் இருக்கும் காற்றறைக்கும் காற்று செல்கிறது. இயற்கை எந்தப் பாதுகாப்பையும் செய்யவில்லை, மார்புக்கூட்டில் வைத்திருப்பதைத் தவிர. எனக்கென்று சிறப்பான பாதுகாப்புக் கவசம் எதுவும் கிடையாது. நான் மிக மிக மென்மையானவன். பாதுகாப்பற்றவனும் கூட. இன்றைய மாசுமிக்க உலகைச் சந்திக்கும் பலம் எனக்கில்லை. அதனால்தான் பல் வகையால் நோய்கள் என்னைத் தாக்குகின்றன. எனவே மாசற்ற காற்றை எனக்குத் தந்து, என்னைக் காப்பாற்றுங்களேன். நான் செவ்வனே பணி புரிந்தால்தான் நீங்கள் உயிர்வாழ முடியும் தெரியுமா?

— மோகனா



காந்திஜியின் கடமை உணர்வு!

நல்ல நாடகங்கள் - டாக்டர் நவராஜ் செல்லையா - பக். 104 - ரூ.20 - சாந்தி மலர்ப் பதிப்பகம், 8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு, தி.நகர், சென்னை.

பள்ளி விழாக்களில் எழுதி நடிக்கப்பட்ட மேடை நாடகங்களின் தொகுப்பே இந்த நூல். மகாபாரதம் புறநானூறின் கிளைக் கதைகள் நாடக வடிவில் தரப்பட்டுள்ளன. இவை தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்ட பெருமைக்குரியவை. ஒவ்வொன்றும் ஒரு நீதியை, நல்ல நெறியை வலியுறுத்துகின்றன. விளையாட்டுத் துறையில் பல நூல்களைத் தந்துள்ள ஆசிரியர் சிறுவர்களுக்காகவும் நாடகம் படைத்துள்ளது சிறப்பானது.

நன்னெறி புகட்டும் நான்கு நாடகங்கள் - ஜானகி மணாளன் - பக்.120 - ரூ.25 - திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17

இந்த நூலுக்குப் பல சிறப்புகள் உண்டு. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் படைப்பு என்பது ஒன்று. சிறுவர் இலக்கியப் பிரிவில் அதிக நூல்கள் இல்லாத நாடகப் பிரிவுக்கு இது புகழ் சேர்க்கிறது என்பது இரண்டாவது. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஏ.வி.எம். அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கம் பெற்றது என்பது மூன்றாவது. இத்தனை சிறப்புகளைத் தாங்கிய இது படங்களோடு நல்ல தரமான தயாரிப்பாகவும் வெளியாகியுள்ளது.

காந்திஜி வாழ்வில் நூறு சுவையான நிகழ்ச்சிகள் - கங்கா ராமமூர்த்தி - பக்.160 - ரூ.30 - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை.

குஜராத்தில் ஒரு கூட்டம். காந்திஜியைப் பேச அழைத்திருந்தார்கள். தாங்களே வந்து அழைத்துப் போவதாகக் கூறியிருந்தும் குறித்த நேரத்தில் அவர்கள் வரவில்லை. காருக்காகக் காத்திராது ஒப்புக் . கொண்ட பொறுப்பை நிறைவேற்றும் கடமையுணர்வில் காந்தி ஓட்டமும் நடையுமாகக் கிளம்பிப் பாதி வழி வந்தார். எதிரே சைக்கிளில் வந்த நண்பரிடம் சைக்கிளை இரவல் பெற்றுக் கொண்டு குறித்த நேரத்தில் கூட்டத்திற்குச் சென்று கலந்து கொண்டு பேசித் தனது கடமையை நிறைவேற்றினார். இதுபோன்று காந்தியின் வாழ்வில் நடைபெற்ற நூறு நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

புகழ் பெற்ற இந்திய விஞ்ஞானிகள் - முத்துக்குமரன் - பக்.128 - ரூ.25 - அழகு பதிப்பகம், 20, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 49.

கி.மு.ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுஸ்ருதரிலிருந்து தொடங்கி இன்றைய கே.எஸ். கிருஷ்ணன் வரையிலான 35 அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார் ஆசிரியர். முகலாய மன்னரான ஜகாங்கீரும் கூட ஒரு வரலாற்று அறிஞரே என்று ஆதாரத்தோடு மெய்ப்பித்துள்ளது வியக்க வைக்கிறது. விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக விளக்கும் கையேடு எனலாம். இருப்பினும் அறுவை சிகிச்சை இயலின் தந்தை எனப் போற்றப்படும் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரதத்தின் சுஸ்ருதரிலிருந்து இந்த வரிசை தொடங்கப்பட்டு ஆண்டு வரிசையில் அமைக் கப்பட்டிருந்தால் இன்னும் அதிகச் சிறப்பாக இருக்கும்.

- ரே

பள்ளிகளில் போட்டிகள்

ஆகஸ்ட் 23ந் தேதி அரும்பாக்கம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 'கதைப் போட்டி' நடத்தினோம். இப்போட்டியில் நிறைய மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை இங்கு பிரசுரமாகியுள்ளது.

வெடியும் வெற்றியும்

எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த கந்தனுக்குப் பள்ளிக்குச் செல்வதென்றாலே வேப்பங்காய் சாப்பிடுவது போல் தான்! அவன் வகுப்பாசிரியர் அறிவழகன். அவர் மிகவும் கண்டிப்பானவர்; அதே நேரத்தில் நல்லவரும்கூட. பெரும்பாலும் அறிவழகன் ஆசிரியரின் வகுப்பில் கேள்விக்கு விடை தெரியாமல் நின்று கொண்டு பாடத்தைக் கவனிப்பது கந்தனின் வழக்கம்.

அன்று கந்தனுக்கும் மணிக்கும் சின்ன தகராறு. கோபத்தில் இருந்த கந்தன் மணி இல்லாத நேரமாகப் பார்த்து அவனின் ஜாமெட்ரி பாக்ஸை ஒளித்து வைத்து விட்டான்.

மணி தேடாத இடமில்லை. ஜாமெட்ரி பாக்ஸ் கிடைக்காததால் அழுது கொண்டே அறிவழகன் ஆசிரியரிடம் முறையிட்டான். ஆசிரியர் விசாரித்தும் பலனில்லை.


திடீரென ஆசிரியருக்கு ஒரு யோசனை தோன்றியது. ''மணியின் ஜாமெட்ரி பாக்ஸைக் கண்டு பிடிச்சு தருகிறவர்களிடம் நான் ஒரு மாதத்துக்குக் கேள்வி கேட்க மாட்டேன்'' என்றார்.


உடனே கந்தன் ஜாமெட்ரி பாக்ஸைக் கொண்டு வந்து கொடுத்தான். ''அடப் பாவி! நீதான் ஒளிச்சு வச்சியா? உடனே போய் எடுத்துட்டு வந்துட்டியே'' என்று கேட்டார். அவன் திருதிருவென முழித்தான். அன்று முழுவதும் வகுப்பை விட்டு வெளியே நிறுத்தி விட்டார் ஆசிரியர்.

கந்தனுக்கு ரொம்பவும் அவமானமாகி விட்டது. அறிவழகன் ஆசிரியர் மீது அளவுக்கதிகமாகக் கோபம் ஏற்பட்டது. அவரை எந்த விதத்திலாவது பழி வாங்கிவிட நினைத்தான்.

ஆனால் சரியான யோசனை கிடைக்கவில்லை.

மறுநாள் பள்ளி செல்லாமல் யோசித்தவனுக்கு அந்த யோசனை பளிச்சிட்டது.





'இன்னும் பத்து நிமிடத்தில் ஆசிரியர் பள்ளி விட்டு கிழக்குத் தெரு பக்கம் வருவார். பட்டாசைக் கொளுத்தி விட்டுட வேண்டியதுதான்' என்று எண்ணிக் கொண்டு கையில் பட்டாசுடன் அவர் வரும் வழியில் காத்திருந்தான்.

அறிவழகன் ஆசிரியர் அருகில் வந்ததும் பட்டாசைக் கொளுத்தி விட்டு, மரத்திற்குப் பின் ஒளிந்துகொண்டான். ஆசிரியர் திடீரென வெடித்த பட்டாசால் மயங்கி விழுந்தார். கந்தனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

மறுநாள் வகுப்பில் ஆசிரியர் நுழைந்தார். "நேற்று என்னை ஒரு மாணவன் பட்டாசைக் கொளுத்தி பயமுறுத்தி விட்டான். அவன் பட்டாசு வைத்ததும் நல்லதுக்குத்தான். ஏனென்றால் ஒரு முனிவர் எனக்குச் சொல்லித் தந்த மந்திரம் நினைவுக்கு வந்துவிட்டது. அம் மந்திரத்தால் நான் நீங்கள் அறியாமல், யாருக்கும் தெரியாமல், உங்களைக் கவனிப்பேன். நீங்கள் படிக்கிறீர்களா, விளையாடுகிறீர்களா என்பதை இனி என்னால் உங்கள் இருப்பிடத்துக்கு வந்து பார்க்க முடியும். எல்லோரும் கவனமாக இருங்கள்" என்றார் ஆசிரியர். கந்தனுக்குப் பயமாக இருந்தது.

பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்த கந்தன் காபி குடித்துவிட்டு விளையாடச் சென்றான். சிறிது நேரத்தில் அறிவழகன் ஆசிரியர் அவன் அருகில் நின்று கவனிப்பது போல் தோன்றியது. உடனே விளையாட்டை விட்டுவிட்டு படிக்க ஆரம்பித்தான். இப்படி எங்கும் எப்போதும் ஆசிரியர் அருகில் நிற்பது போல் தோன்றவும் உடனே படிக்க ஆரம்பித்து விடுவான்.

கந்தனின் மாற்றம் சக மாணவர்களிடம் வியப்பை ஏற்படுத்தியது. காலாண்டுத் தேர்வில் கந்தன் முதல் மதிப்பெண் பெற்றான். அவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. உடனே ஆசிரியர் அறைக்குச் சென்று அறிவழகன் ஆசிரியரைப் பார்த்தான். ஆசிரியர் வாழ்த்தினார். "சார் என்னை மன்னிச்சிடுங்க. நான் உங்களுக்கு வெடி வைத்தும் என்னை மன்னித்து இன்று வெற்றியாளனாக மாற்றி விட்டீர்கள்" என்றான் கண்களில் நீர் வழிய.

"அந்தச் சம்பவத்துனாலதானேப்பா இன்னிக்கு நீ இவ்வளவு உயர்ந்தவனாக மாறிட்டே. எனக்கு ரொம்பச் சந்தோஷம். இனி தொடர்ந்து இப்படியே இருந்தீன்னா அதுவே போதும். போயிட்டு வா" என்று கூறி அனுப்பி வைத்தார் ஆசிரியர்.

— வி. உமா மகேஸ்வரி,
எட்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, அரும்பாக்கம்.

இன்று ஏஷியன் மெடல்; நாளை ஒலிம்பிக் மெடல்!

ஒய்.எம்.சி.ஏ. பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறார் ஜெகத்ஜோதி. தேசிய ஜூனியர் ஹாக்கி அணியில் இடம் பெற்று இந்தியாவுக்காக விளையாடி வருகிறார். 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஏஷியன் ஹாக்கி போட்டிகளில் இவர் இடம் பெற்றுள்ள இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றிருக்கிறது.


ஹாக்கியில் ஆர்வம் வந்தது எப்படி?

என் போன்ற மாணவர்கள் பொதுவாக கிரிக்கெட் பேட்டைத் தூக்கிக் கொண்டுதான் அலைவார்கள். ஆனால் நான் ஹாக்கி பேட்டுடன் அலைந்திருக்கிறேன். அதற்குக் காரணம் என் அண்ணன் ஒரு ஹாக்கி வீரராக இருந்ததுதான். அதுமட்டுமின்றி எங்கள் வீட்டுப் பகுதியில் நிறைய பேர் ஹாக்கி விளையாடுவார்கள். எந்த வயதிலிருந்து எனக்கு ஆர்வம் வந்தது என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் ரொம்பச் சின்ன வயதில், மட்டையைத் தூக்க முடியாமல் தூக்கித் திரிந்திருக்கிறேன். எனக்கு ஹாக்கி மேல் இருந்த ஆர்வத்தைப் புரிந்து கொண்டு என் அண்ணன் பயிற்சியளித்தார். என் அம்மா, அப்பா மற்றும் பயிற்சியாளர்கள் சந்தோஷ், ஸ்டீபன், அலெக்ஸாண்டர், ரமேஷ் பத்தானியா, சி.ஆர்.குமார், அடைக்கலநாதன் முக்கியமாக இந்திய ஹாக்கி சம்மேளன செயலர் ஜோதிகுமார் இவர்களின் முழுமையான ஒத்துழைப்பால்தான் நான் இந்த நிலையை அடைந்திருக்கிறேன்.



* தேசிய ஜூனியர் ஹாக்கி அணி

தேசிய ஜூனியர் அணிக்குத் தேர்வானது எப்படி?





* மத்திய அமைச்சர் யஷ்வந் சின்ஹாவிடமிருந்து பாராட்டுப் பெறுகிறார் ஜெகத்ஜோதி

நான் முதலில் ஆதம்பாக்கம் பகுதி ஹாக்கி அணியில் விளையாடிக் கொண் டிருந்தேன். என்னுடைய ஆட்டத் திறனைப் பார்த்து பலரும் தங்கள் அணியில் விளை யாடக் கூப்பிட்டார்கள். பிறகு சென்னை மாவட்ட அணியில் நான் இடம் பெற்றேன். அதற்குபின் S.A.I. (Sports Authority of India) யின் பயிற்சியாளர் என்னை S.A.I.ல் சேர்த்துக் கொண்டார். அங்கு கடுமையான பயிற்சிக்குப்பின் என்னுடைய விளையாட்டில் ஏற்பட்ட நம்பிக்கையால் 1998ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஹாக்கி அணியில் சேர்க்கப் பட்டேன். கடுமையான பயிற்சியுடன் தேசிய அணிக்கான தேர்வில் தேறி 1999ல் தேசிய அணியில் சப் ஜூனியர் பிரிவில் இடம் பெற்றேன்.

1999ல் தேசிய சப் ஜூனியர் அணி யில் சேர்ந்து அதற்குள் இரண்டு தங்கப் பதக்கம் பெற்றது எப்படி?

2000ஆவது ஆண்டில் முதல் முறையாக இந்திய ஹாக்கி சம்மேளன அணியில் இடம் பெற்றேன். 16 வயதிற்குட்பட்டோருக்கான இந்திய அணியில் இடம் பெற்று சிங்கப்பூர் சென்றேன். அங்கு எங்கள் அணி கொரியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற அணிகளு டன் கடுமையாகப் போராடி தங்கம் வென்றது.

சிங்கப்பூர் அனுபவம்?

நான் முதல் முறை வெளிநாடு சென்றது

இந்தச் சிங்கப்பூருக்குத் தான்! சிறிய நாடாக இருந்தாலும் அழகானது சிங்கப்பூர். எழில் கொஞ்சும் உயர்ந்த கட்டடங்கள், அன்பான மக்கள், பெரிய கடைகள் என பல விஷயங்கள் என்னைக் கவர்ந்தன. ஆனால் நிறைய இடங்களுக்குப் போவதற்கு நேரம் இல்லை. தங்கம் வென்றதால் உடனே கிளம்பி வந்துவிட்டோம்.

இரண்டாவது தங்கம்?

இந்த ஆண்டு மீண்டும் இந்திய அணியில் மலேஷியாவில் சென்று ஆடக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இம்முறை தமிழ் நாட்டிலிருந்து என்னுடன் கார்த்திக்கும் தேர்வு செய்யப்பட்டார். இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்து தங்கம் வென்றது எங்கள் அணி.

இப்படி வெளிநாடு செல்வதால் படிப்பு பாதிக்காதா?

எங்கள் பள்ளியே விளையாட்டுக்கான பள்ளிதான். அதில் இடம் கிடைப்பதும் கஷ்டம்தான். எங்கள் விளையாட்டிற்கு ஏற்றவாறு அட்ஜஸ்ட் செய்து கொள்ள முடிகிறது. பாடங்களை எங்களுக்குத் தனியாகச் சொல்லிக் கொடுத்து விடுவார்கள்.

ஹாக்கி வீரராக வர நிறைய செலவாகுமா?

நன்றாக விளையாடக் கூடிய வீரர்களுக்கு S.A.I.யில் இடம் கிடைக்கும். அதற்கும் தேர்வு உண்டு. அங்கேயே ஹாஸ்டல் வசதி உண்டு. விளையாட்டு வீரர்களுக்கு ஏற்ற உணவு கொடுக்கப்படுகிறது. பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இதுமட்டுமின்றி விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு உடை போன்றவற்றையும் அவர்களே வழங்கிவிடுவார்கள். எனவே கஷ்டப்பட்டு விளையாடி நம்மை நிலை நிறுத்திக் கொள்வதுதான் முக்கியம். நம் ஆட்டத்திறனைப் பொறுத்து சலுகைகளைப் பெறலாம்.

கிரிக்கெட் அளவுக்கு ஹாக்கி ஏன் பிரபலமாகவில்லை?

எல்லாம் ஸ்பான்சர்களால்தான். கிரிக்கெட்டுக்கு ஸ்பான்சர்கள் அதிகம். இப்ப நிறைய பேருக்கு ஹாக்கி மேல் ஆர்வம் ஏற்பட்டு வருகிறது.

ஹாக்கி வீரராக நினைக்கும் ஒரு கிராமத்துச் சிறுவனால்கூட வீரராக முடியுமா?

தாராளமாக. முதலில் அவர்கள் கிராமம், டவுன், மாவட்டம் என்ற அளவுகளில் திறமையாக விளையாட வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். அப்படி செய்தால் மாநில அளவில், தேசிய அளவில் என முன்னேறலாம். மற்ற விளையாட்டு வீரர்களுக்கு உள்ளது போலவே ஹாக்கி வீரர்களுக்கும் நல்ல வேலை, நல்ல எதிர் காலம் உண்டு. நிறைய பேர் விளையாட்டுத் துறைக்கு வரணும். சாதாரணமானவர்கள்கூட பெரிய அளவுக்கு வர முடியும். அதுக்கு நானே உதாரணம்.

லட்சியம்?

நான் இந்திய அணியில் இடம் பெற்று ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதுதான் லட்சியம், ஆசை, கனவு...

இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி, ஒரு காலத்தில் ஓஹோவென்று இருந்தது ஹாக்கி அணி. இன்று குறிப்பிட்டுச் சொல்லும்படியான சாதனைகள் இந்திய அணியிடம் இல்லை. ஜெகத்ஜோதி, கார்த்திக் போன்றவர்களைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் இந்திய அணி வலுவடைந்து, பல சாதனைகளைப் படைக்கும் என்ற நம்பிக்கை வருகிறது.

அட்டையில் : **ஜெகத்ஜோதி, கார்த்திக்**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

"வெண்ணை எடுத்த பாலைத்தான் கொடுக்கிறாயாமே?"

"இது கடைந்தெடுத்த பொய்யுங்க.."

- எஸ். மோகன், விருதாச்சலம்





• ஹரிகிருஷ்ணா

இந்தியா, இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கையிடம் கோட்டை விட்டது இந்திய அணி. அடுத்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற 3 டெஸ்ட் போட்டிகளிலாவது கோப்பையை வென்று விடும் என ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர்.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை வென்றது. இரண்டாவது போட்டியில் இந்தியா வென்று, 1:1 என்ற கணக்கில் இரு அணிகளும் சம நிலையில் இருந்தன.

மூன்றாவது டெஸ்ட் போட்டி இரு அணிகளுக்கும் முக்கியமாக இருந்தது. இதில் இலங்கை அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்று கோப்பையைத் தட்டிச் சென்றுவிட்டது.

ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்த இந்திய அணி தென் ஆப்பிரிக்கா செல்ல இருக்கிறது. வலுவான தென் ஆப்பிரிக்க அணியிடம் இந்திய அணி முழு பலத்தையும் காட்டும் என நம்புவோம்.



• முரளிதரன்

முத்திரை முரளிதரன்

ஆல்ரவுண்டர்!


இலங்கை கிரிக்கெட் அணியின் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர் முத்தையா முரளிதரன். கொழும்புவில் நடந்து முடிந்த இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மளமளவென்று விக்கெட்டுகளைச் சாய்த்தார். 234 ரன்களுக்கு இந்திய அணியின் முதல் இன்னிங்ஸை முடிவுக்கு கொண்டு வந்த முரளிதரன் எடுத்த விக்கெட்டுகள் மொத்தம் 8. இவர் 34.1 ஓவர் வீசி 87 ரன்கள் கொடுத்து 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

டெஸ்ட் போட்டிகளில் 26வது முறையாக முரளிதரன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். நியூசிலாந்து வீரர் ஹாட்லி 36 முறையும், இங்கிலாந்து வீரர் போத்தம் 27 முறையும் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட் சாதனையாளர் பட்டியலில் முரளிதரன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்து வீச்சாளராக மட்டும் அறியப்பட்ட முரளிதரன் இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் மட்டையைப் பிடித்து விளாசினார். அவர் எடுத்த ரன்கள் 67. டெஸ்ட் வாழ்வில் மறக்க முடியாத ஆட்டம் என இந்த ரன் குவிப்பைக் குறிப்பிட்டுள்ளார் முரளிதரன். இருந்தாலும் தொடர்ந்து பந்து வீச்சில்தான் கவனம் செலுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்.

இளம் கிராண்ட் மாஸ்டர்

கோல்கத்தாவில் நடந்த ஆசிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் கிராண்ட் மாஸ்டருக்கான மூன்றாவது தகுதியை அடைந்தார் ஹரிகிருஷ்ணா. இதன்மூலம் இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார் 15 வயதான ஹரிகிருஷ்ணா. இவர் ஆந்திராவைச் சேர்ந்தவர். உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் 18 வயதில் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.



அன்பு பெருக அராஜகம் அழியும்

உலகில் எந்த நாட்டு மக்களுக்கும் எந்த சமயத்திலும் நடக்கக் கூடாத காரியங்கள் நடந்துவிட்டன, அமெரிக்காவில்.

பயங்கரவாதிகள் நாலு விமானங்களை ஹை-ஜாக் செய்தார்கள். கத்திமுனையில் விமானிகளை அப்புறப்படுத்திவிட்டு தாங்களே விமானிகள் இருக்கையில் அமர்ந்தார்கள். நாலு விமானங்களும் சற்று முன்னர்தான் விமான நிலையங்களிலிருந்து புறப்பட்டிருந்தன. எனவே, எரிபொருள் நிரம்பியிருந்தது.

விமானங்களைத் திசை திருப்பிக் கொண்டு போனார்கள். நியூயார்க்கில் உலக வர்த்தகக் கேந்திரம் என்பதாக வானளாவிய இரட்டைக் கட்டடங்கள். அவற்றின்மீது ஒன்றன் பின் ஒன்றாக இரு விமானங்களும் மோதின. குண்டு வெடிப்பதைக் காட்டிலும் பல மடங்கு சேதம் விளைவிப்பதாக எரிபொருள் பற்றி எரிய, கட்டடங்கள் அந்த உஷ்ணத்தில் உருகி நொறுங்கின. வாஷிங்டனில் 'பென்டகன்' என்ற கட்டடம் ராணுவத் தலைமையகம் ஆகும். அதன்மீது ஒரு விமானம் மோதியது. மற்றும் ஒரு விமானம் வேறு ஒரு நகரில் இதே போல மிகுந்த சேதம் விளைவித்தது.

பல்லாயிரக் கணக்கில் மக்கள் மாண்டு போனார்கள். அமெரிக்கா, இந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. அமெரிக்க அதிபர், "இந்தச் சதியை நிறைவேற்றியவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டேன்" என்று சூளுரைத்துள்ளார்.

பயங்கரவாதம் என்பது வீரமேயல்ல. போரில் ஒருவரை ஒருவர் எதிர்த்து நின்று யுத்தம் செய்வது வீரமேயன்றி, ஒரு பாவமும் அறியாத மக்களைக் கொன்று குவிப்பதும் அந்த முயற்சியில் தற்கொலை செய்து கொள்வதும் வடிகட்டின கோழைத்தனமே. இதனை அரக்கத்தனமான, மானாவாரிப் படுகொலை என்றுதான் கூற வேண்டும்.

நமது காஷ்மீரிலும் இத்தகைய பயங்கரவாதம் இன்று மக்களை வருத்துகிறது. ஒரு பாவமும் அறியாத எளியோரும் முதியோரும் குழந்தைகளும் கொன்று குவிக்கப்படுகின்றனர். அமெரிக்காவை ஒப்பு நோக்க, மடிந்தவர்களின் எண்ணிக்கை சற்று குறைவாக இருக்கலாம். ஆனால் அதனால் இந்தக் காட்டுமிராண்டி செயலின் தன்மை மாறிவிடாது. இத்தகைய கொடூரங்கள் உலகையே மனிதன் வாழத் தகுதியற்றதாக்குகின்றன.


இந்த உலகும் அதன் வளங்களும் அழகும் இறைவன் நமக்கு அளித்த செல்வங்கள். அந்த எழில்களை அனுபவிக்க நம்மையும் ஆண்டவன் படைத்தனன். இனம், மதம் என்ற பெயர்களில் விரோதங்களை வளர்த்துக் கொண்டு உலகையும் நம்மையும் ஒரே சமயத்தில் அழித்துக் கொள்வது எந்த மதத்துக்கும் பெருமை சேர்க்காது. எந்த மதக் கோட்பாடும் இதை அனுமதிக்கவில்லை. உலக அமைதியையும் அதற்கு அடிப்படை தர்மமாக அன்பையும் தான் அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன.

'இதில் நமது பங்கு என்ன?' என்று ஒதுங்காதீர்கள். ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு மனித நேயம் வளர்ப்பது நம் கடமை. நீங்கள் நாலு பேரிடம் காட்டும் அன்பு நாற்பது பேரிடம் பரவும். அந்த நாற்பது பேர் செலுத்தும் அன்பு இப்படியே வளர்ந்து வளர்ந்து உலகையே அரவணைக்கும்.


- ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


புள்ளிகளை இணையுங்கள்!



மீதியை வரையுங்கள்!



இந்த மரங்களில் ஒன்று வித்தியாசமானது. அது எது?



எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?




விடை: 73

"எங்க கிரிக்கெட் டீமில் நான் அவுட்டாகிவிட்டால் அதற்கு மேல் ஒரு ரன்கூட உயரவே உயராது."

"உங்க டீம்லேயே நீதான் சிறந்த பேட்ஸ்மேனா?

"இல்லை... இல்லை. நான் தான் எங்க டீம் லேயே கடைசி பேட்ஸ்மேன்."

— உத்திரகுமார்





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001 •
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 • Registered as a Newspaper in Srilanka